இதழ் 357
20 செப்டம்பர் 2025
20 பக்கங்கள்

இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube. com/@IlakkuWeb2. 0
LIKE US! facebook. com/ilakku. ilakku. 10
FOLLOW US! twitter. com/Ilakku1



விதுரன்

# ஐ. நா. வில் புதிய வரைவு யாருக்கு வெற்றி




# தமிழரின் தாகத்துக்கு உரம் சேர்த்த திலீபனின் தியாகம் ! 38ம், ஆண்டு நினைவு.!

பா. அரியநேத்திரன்



# “உலகில் எங்களுக்கு வேறு நண்பர்களும் உள்ளனர்”

வேல்ஸிலிருந்து அருஸ்

info@ilakku. org
© 2025 இலக்கு இணையம்

# தியாகி திலீபனின் திருவுருவப்படம் காவல்துறையினரால் அகற்றம்!

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு 'திலீபன் வழியில் வருகிறோம்' என்ற ஊர்தி பவனியானது தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் கடந்த 5 நாட்களாக திருகோணமலையில் நினைவு கூரப்பட்டு வரும் நிலையில், நேற்று(19) காலை காவல்துறையினரால் திலீபனின் திருவுருவப்படம் அகற்றப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களால் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் திலீபனின் நினைவுத் திருவுருவப்படம் சிவன் கோயிலடியில் நிறுவப்பட்டு, தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மாலை 5.15



அளவில் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் (19) திருகோணமலை தலைமை காவல் நிலைய அதிகாரிகளால் திலீபனின் திருவுருவப் படம் முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டுள்ளது.

இதற்கு சமூக செயற்பாட்டாளர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# காசாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இனப்படுகொலைகளை உறுதிப்படுத்தியது ஐ.நா

காசாவில் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேல் இனப்படு கொலை செய்துள்ளது என்று ஐ.நா. விசாரணை ஆணையம் கடந்த செவ்வாயன்று(16) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

விசாரணைகளின்படி, 2023 இல் ஹமாஸுடனான போர் தொடங்கியதிலிருந்து 1948 இனப்படுகொலை மாநாட்டின் கீழ் வரையறுக்கப்பட்ட ஐந்து இனப்படுகொலை செயல்களில் நான்கை இஸ்ரேல் செய்துள்ளது. இவற்றில் கொலை, கடுமையான உடல் அல்லது மன ரீதியான தீங்கு



விளைவித்தல், பாலஸ்தீனியர்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கில் அவர்களுக்கு நெருக்கடியான வாழ்க்கை நிலைமைகளை திட்டமிட்டு ஏற்படுத்துதல் மற்றும் பிறப்புகளைத் தடுப்பதற்கான

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# அரசியல் வீழ்ச்சியை நோக்கி பிரான்ஸ்



வரவு செலவுத்திட்டத்தில் கொண்டுவரப்பட்ட நிதிக் குறைப்புக்கான அரசாங் த் திட்டங்களை எதிர்த்துதொழிற்சங்கங்கள் வெகுஜன வேலை நிறுத்தங்களை ஆரம்பிக்கவுள்ளதால், பிரான்ஸ் நாடு தழுவிய நெருக்கடிகளுக்குத் தயாராக உள்ளது.

வியாழக்கிழமை(18) ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் போக்குவரத்து ஊழியர்கள் உள்ளிட்டோர் நடத்திய வெளிநடப்பு, நாட்டின் சில பகுதிகளை முடக்கியிருந்தது, கடந்த ஆண்டு ஓய்வூதிய சீர்திருத்தம் மீதான கடுமையான போராட்டத்திற்குப் பிறகு மிகப் பெரிய அணிதிரட்டல்களில் ஒன்றாக இதனை தொழிற்சங்கங்கள் பார்க்கின்றன.

சிக்கனத் திட்டங்கள் ஜனாதிபதி

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# யாழ். மண்டைதீவு மனிதப் புதைகுழி விவகாரம் குறித்து வழக்கு தாக்கல்!



யாழ். மண்டைதீவு மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1991ம் ஆண்டு தீவகத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றியது. அச் சமயம், மண்டைதீவில் உயிருடன் பிடிக்கப்பட்ட பொதுமக்களில் பலர் இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட துணைக் குழுக்களாலும் கொல்லப்பட்டனர்.

அவர்களின் சடலங்கள் அங்குள்ள தேவாலயக் காணியில் உள்ள கிணறு உள்ளிட்ட 3 கிணறுகளில் போடப்பட்டு மூடப்பட்டன என்று கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடாத்தி அந்தக் கிணறுகளைச் சட்ட ரீதியாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களை நேரில் கண்ட சாட்சியங்கள் மற்றும் மதகுருமார் சிலரும் இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு கடந்த 17ம் திகதி புதன் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# அடுத்து மாலைதீவில் போராட்டமா?

பேச்சு சுதந்திரத்தையும் ஊடகங்களையும் முடக்கக்கூடும் என்று விமர்சகர்கள் கூறும் ஒரு மசோதாவை மலைதீவின் ஜனாதிபதி முகமது முய்சுவின் அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, மாலைதீவில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு முக்கிய பத்திரிகையாளர் சங்கம் இந்த மசோதாவை நிராகரிப்பதாக கடந்த புதன்கிழமை (17) தெரிவித்துள்ளது, அதேநேரத்தில் பிரதான எதிர்க்கட்சி போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்



ளது மற்றும் உலகளாவிய பத்திரிகை சுதந்திரக் குழு முய்சுவை சட்டத்தை வீட்டோ செய்ய வலியுறுத்தியுள்ளது.

பாரம்பரிய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் ஆன்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நிலைப்பாட்டில் செயற்படுகிறோம்

## – பிமல் ரத்நாயக்க–

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு தான் நாங்கள் செயற்படுகிறோம் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ் மாவட்ட விசேட போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் வியாழக்கிழமை (18) யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நிகழ்வுகளை நடத்தி நாங்கள் வடக்கில் காணிகளை விடுவிக்கவில்லை. காணி பிரச்சினையை அரசியல் இலாபத்துக்காக நாங்கள் பயன்படுத்தவில்லை. காணிகளை விடுவிப்பதை நாங்கள் அரசியலாக்கவில்லை.



பாதுகாப்பு காரணிகளின் நிமித்தம் கடந்த காலங்களில் காணிகள் கையகப்படுத்தப் பட்டுள்ளன. பாதுகாப்பு காரணிகளுக்காக பெற்றுக்கொண்ட காணிகளை பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்கள் தமிழ் அரசியல் கட்சிகளை காட்டிலும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்துள்ளார்கள். ஆகவே மக்களுக்கு

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# செயற்கைகோள் இணையத்தளத்தை உருவாக்கும் ரஸ்யா



அமெரிக்காவின் எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸால் இயக்கப்படும் ஸ்டார்லிங்கைப் போன்ற ஒரு செயற்கைக்கோள் இணைய வலையமைப்பை ரஷ்யா விரைவில் அறிமுகப்படுத்தும் என ரஷ்ய விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் நிறுவனத்தின் தலைவர் டிமிட்ரி பகானோவ் கடந்த புதன்கிழமை(17) தெரிவித்துள்ளார்.


ஸ்டார்லிங்க், பூமியின் குறைந்த சுற்றுப்பாதையில் இருந்து அதிவேக இணையத்தை வழங்குகிறது மற்றும் ரஷ்யாவுடனான மோதலில் உக்ரேனியப் படைகளுக்கு அது முக்கிய பங்கு வழங்கியிருந்தது, இதனால் அவர்கள் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், கண்காணிப்பை நடத்தவும், முன்னணிக்காவல் நிலைகளில் இரு ந்து ட்ரோன் அமைப்புகளை இயக் கவும் உதவி யிருந்தது.

சோலோவியோவ் லைவ் நிகழ்ச்சியில் பேசிய பகானோவ், ரஷ்யாவின் இணைய செயற்கைக் கோள்களின் முதல் ஏவுதல்கள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# தியாகி திலீபன் 1987ல் சொன்னதை 2025ல் ஈழத்தமிழர்கள் செய்யவேண்டும்

பா. அரியநேத்திரன்



1987 செப்டம்பர் 15 முதல் 26 வரை நல்லூர் முருகன் ஆலய முன்றலில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட தியாகி திலீபன் இறுதியாக ஆற்றிய உரையில்.. "என் அன்பிற்கினிய மக்களே என்னால் பேச முடியவில்லை. பேச முடியாத நிலையில் இருந்தும் என்னை நீங்கள் தரும் உற்சாகம் பேச வைக்கிறது. நான் மீட்கப்பட முடியாத இடத்திற்கு போய்க் கொண்டிருக்கிறேன். நான் வாழ்நாள் முழுவதும் நேசித்த என் தேசத்து மக்களே, உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும். இங்கே ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். மறைந்த போராளிகள் 650 பேருடன், 651வது போராளியாக நான் மேலே இருந்து மலரும் தமிழீழத்தை மகிழ்வோடு பார்ப்பேன். போராடத் தயாராகுங்கள். எனக்கு விடை தாருங்கள்." எனகூறிவிட்டே ஆகுதியானார்.

அவர் அப்படிக்கூறி 18 நாட்களுக்குப் பின்னர் தான் 1987 அக்டோபர் 10ல் தமிழீழ விடுதலைப் புலிகள் - இந்தியப்படைகளுடன் போர் ஆரம்பித்தனர் அதன் பின்னர் 1990 ல் இலங்கைப்படையினருடன் போர் ஆரம்பித்து மரபுப்படையணிகளுடன் வளர்ச்சியடைந்து பல்வேறு சமர்கள் செய்து பின்னர் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சர்வதேச சதி மூலமாக 2009 மே 18ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் மௌனித்தது

போர் மௌனித்து 16 வருடங்களாகியும் தியாகி திலிபன் கூறிய மக்கள். புரட்சி என்பதை எந்த ஒரு தமிழ்தேசிய கட்சிகளும் தலைமை தாங்கி முன் னெடுக்கத்தவறிவிட்டன.

ஆட்சியில் இருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரி பால, கோட்டபாய, ரணில்விக்கிரமசிங்க வரை தமிழர்களுக்கு எந்த அரசியல் தீர்வும் வழங்க தயாக இருக்கவில்லை. தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதி அநுராவும் அவருடை ஆட்சியும் சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கை இருந்தாலும் தமிழ் மக்களை பொறுத்தவரை குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கை அற்ற ஒரு ஜனாதிபதி யாகவே அநுராவும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை வடகிழக்கில் செய்து கொண்டுள்ளார்.

தற்போது செம்மணியில் 240, தாண்டி தமிழர் களின் எலும்புக்கூடுகள் இனப்படுகொலைக்கு சாட்சிய மாக வெளிவந்துகொண்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு சென்ற ஜனாதிபதி அநுரா அவர்கள் கச்சதீவுக்கு சென்று படம் காட்டியவர் செம்மணி படுகொலை புதைகுழிக்கு சென்று பார்ப்பதற்கு கூட மனம் வரவில்லை.

அவர் பார்ப்பதால் நீதிகிடைக்கும் என்று இல்லை தமிழ் மக்களுக்கு அவர் பார்த்தார் என்ற ஒருவகை திருப்தி ஏற்பட்டிருக்கும் அதுகூட அவர் செய்யவில்லை,

தற்போது ஜெனிவாவில் மனித உரிமை ஆணைக் குழுவில் 60 வது கூட்டத்தொடர் நடக்கும் இந்த சந்தர்பத்தில் ஒட்டு மொத்த தமிழர்களும் சர்வ தேச விசாரணை தேவை என்ற தொடர் அழுத்தம் கொடுக்கும்போது உள்நாட்டு பொறிமுறைதான் தீர்வு என வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் எல்லோரும் ஜெனிவாவுக்கு படை எடுத்து சென்று வலியுறுத்திவருவதை காணமுடிகிறது.

இவ்வாறான சந்தர்பத்தில் ஈழத்தமிழர்கள் ஒற்று மையாக ஒரேகுரலாக மக்களை அணிதிரட்டி தியாகி திலீபன் 1987ல் இதே மாதம் 38, ஆண்டுகளுக்கு கூறிய மக்கள் புரட்சிக்காக ஈழமக்கள் தமிழ் தேசிய கட்சிகள்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## பிரித்தானியாவின் மொந்தவீடியோ மரபு மீறல் ஈழத்தமிழர் இறைமையும் தன்னாட்சியும் அனைத்துலக அங்கீகாரம் பெறுதலை இலகுவாக்கியுள்ளது

பலஸ்தீனத்தை அரசாகப் பிரித்தானியா அங்கீகரித்துள்ள வரலாற்று மாற்றம் 1933ம் ஆண்டின் 'மொந்தவீடியோ மரபின் விளைவு திறன் வரைகூறான (Montevideo effectiveness criteria)' 'தெளிவாக வரையறுக்கப்பட்ட எல்லைக ளும், நிலையான மக்கள் தொகையும், ஒருமை யாகச் செயற்படும் அரசாங்கமும் இருந்தாலேயே அதனை அரசாக அங்கீகரிக்கலாம் என்ற நிபந்தனையை மீறியுள்ளது. இதனை பிரித்தானியாவின் ஆங்கில நாளிதழான 'த கார்டியன்;' உடைய ராஜதந்திர பத்திரிகாசிரியரான பற்றிக் வின்ரூர் தனது 18.09.2025ம் திகதிய யூ.கே. வெள்ளிக்கிழமைக்குள் பலஸ்தீனிய அரசை அங்கீகரிக்க ஆயத்தமாகிறது' என்ற 'த கார்டியன்' கட்டுரையில் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவின் இந்த 'மொந்தவீடியோ மரபு' மீறல் உலகின் சமகாலப் பிரச்சினையாக உள்ள ஈழத்தமிழரின் இறைமையும் தன்னாட்சியும் பிரித்தானியாவால் இதே அடிப்படையில் அங்கீகரிக்கப்பட வேண்டிய தார்மீகநிலையை பிரித்தானியாவுக்கு ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோண்சன் பலஸ்தீனப் பிரச்சினை குறித்த தனது அவர் பிரதமராக இருந்த காலத்துக் கருத்துப்பரிமாற்றமொன்றில் பிரித்தானியா பலஸ்தீனத்திலும் இலங்கையிலும் வெவ்வேறான இருதேசங்களை ஒன்றாக்கி ஆட்சிபுரிந்தனர் என குறிப்பிட்டமை நினைவுக்கு வருகின்றது. இப்போது பலஸ்தீனிய தேசத்தைப் பிரித்தானியா அங்கீகரிக்கப்பதன் மூலம் பலஸ்தீனியர்கள் இஸ்ரேயலால் 77 ஆண்டுகள் இனஅழிப்புறும் நிலைக்குப் பாதுகாப்பை பிரித்தானியாவின் இன்றைய பிரதமர் கியர் ஸ்ராமர் வழங்குகிறார். அதே போல அவர் 04.02.1948 முதல் இன்று வரை 77 ஆண்டுகள் பிரித்தானிய காலனித்துவம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சி முறைமைக்குள் பிரித்தானியாவிடம் இருந்த தங்களின் யாழ்ப்பாண வன்னி அரசுக்களின் இறைமையைச் சிங்களவர்களின் இறைமையுடன் இணைத்த பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்காலத் தவறால் தொடர்ச்சியாக இனஅழிப்புக்கு உள்ளாகி வரும் ஈழத்தமிழர்களையும் அவர்களின் ஈழத்தமிழர் தாயகத்தை அங்கீகரிப்பதன் மூலம் உடன் பாதுகாக்க வேண்டும் என்று இன்று பிரித்தானியாவின் குடிகளாக உள்ள ஈழத்தமிழர்கள் ஒருமைப்பாட்டுடன் வலியுறுத்த வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

1995இல் தென்னாபிரிக்கா முதன்முதலில் பலஸ்தீனிய அரசை அங்கீகரித்ததின் பின்னர் 2010இல் பிரேசிலும் 2011இல் சிலியும் 2012இல் தாய்லாந்தும் 2025இல் ஸ்பெயினும் பலஸ்தீனியத்தை அங்கீகரித்ததின் பின்னரே 2025இல் 10 ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீனியத்தை அங்கீகரிக்கும் நிலை உருவானது. இதனை ஏன் குறிப்பிட வேண்டியுள்ளதென்றால் எவ்வாறு பலஸ்தீனியர்கள் உலகின் எல்லாநாடுகளுடனும் தங்கள் உரையாடல்களை நடாத்தி இந்த நிலைக்கு வந்தனர் என்பதை ஈழத்தமிழர்கள் கவனத்தில் எடுத்தல் வேண்டும். ஈழத்தமிழர்கள் ஒருசில நாடுகளுடன் மட்டும் அதுவும் திட்டமிட்ட முறையில் இல்லாது மனம்போன போக்கிலேயே தங்கள் உரையாடல்களை முன்னெடுக்க முயற்சிப்பதே ஈழத்தமிழர்களால் உலகளாவிய மக்கள் ஆதரவை பலஸ்தீனியர்களை விட மோசமாகப் பல இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பைச் சந்தித்த நிலையிலும் இன்று வரை பெற இயலாதுள்ளமைக்குக் உள்ளமைக்குக் காரணமாகிறது. இன்றும் பலஸ்தீனிய மக்களுக்காக பலஸ்தீனியர் அல்லாத உலக மக்களே எங்கும் சிறைக்குப் போவதைக் கூடப் பொருப்படுத்தாது போராடுவதைக் காண்கின்றோம். ஆனால் ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரை தேசிய விடுதலைப்போராட்டத்தையும், கட்சிகளும் அமைப்புக்களும் இயக்கங்களும் எல்லா மக்களுக்கும் உரியதாகக் கருதாது முற்றுரிமை கொண்டாடுகின்ற போக்கு அரசியல் வழக்கமாகப் பழக்கமாகியுள்ளதால் அவர்களுடைய முயற்சிகள் வெறும் பரப்புரைகளாகவே உலகின் ஊடகங்களால் பார்க்கப்படும் போக்கும் காணப்படுகிறது.

கடந்த வாரத்தில் தியாகி திலீபனின் நினைவேந்தலுக்குச் சென்ற தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை "திலீபன் வழியில் வருகின்றோம்" என தியாகி திலீபனின் திருவுருவ ஊர்தியைத் தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தாமே முற்றுரிமை கொண்டாடி அவரைத் தடுத்த செயல் குறித்துத் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த போராளியும் தியாகி திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த பொழுது அருகிருந்தவருமான பசீர் காக்கா என அழைக்கப்படும் மு.மனோகர் அவர்கள் யாழ்ப்பாண ஊடக மையத்தில் செய்தியாளர் சந்திப்பில் "தியாக தீபம் திலீபனின் ஈகத்தின் பெறுமதியையோ தமிழ்த்தேசியம் என்ற விடயத்தையோ விளங்கிக் கொள்ளாமல் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் கோமாளிக்கூத்துகளை நடாத்துவதையும், எமது போராட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் ஒட்டுமொத்த தமிழினத்தையும் தலைகுனியும் வகையில் தெருச்சண்டியர்கள் போல் நடந்து கொள்வதையும் சகிக்க முடியாதுள்ளது. மாற்றுக் கருத்துடையோருக்கு அஞ்சலி செலுத்துவதும் இறுதிச்சடங்கு போன்றவற்றில் கலந்து கொள்வதும் ஒரு நாகரிக சமூகத்தில் நடக்கும் விடயங்களே. எல்லாவற்றையும் 13வது திருத்தத்தை ஏற்றோர் எதிர்ப்போர் என்ற வாய்ப்பாட்டில் துரோகி-தியாகி என வகைப்படுத்தும் புதியதோர் ஒழுங்கைக் கொண்டு வரத்துடிக்கின்றனர். வட கிழக்குக்கு அப்பால் உள்ள எமது உறவுகள், தென்னிலங்கையிலுள்ள நடுநிலையானோர் எமது போராட்டத்தையும், திலீபனின் தியாக வரலாற்றையும் அறிய விடாமல் திரைபோட முனைவது சிறுபிள்ளைத்தனமானது. முன்பு திலீபனின் நினைவேந்தலில்; தியாக தீபம் திலீபனின் திருவுருவத்துக்குத் மாலை சூட்ட வரிசையில் நின்ற என்னை பிறகு மாலை போடுங்கள் எனத் திருப்பியனுப்ப முனைந்தார்.

உடனே அங்கே வந்த சனநாயகப் போராளி அமைப்பினர் என்னைக் கூட்டிச் சென்று மாலை போட உதவினர். அன்று என்னை தடுத்தவர்தான் இப்போது திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த சந்திரசேகரிடம் தமது எதிர்ப்பை வெளியிட ஆரம்பித்து எங்களை நாகரிகமற்ற மக்கள் கூட்டமாக வெளிப்படுத்த முனைந்தனர்." எனக் கூறியுள்ளார். மூத்த போராளி ஒருவரின் இந்தக் கூற்று ஈழத்தமிழர்களில் சிலரின் எல்லாவற்றையும் முற்றுரிமை கொண்டாடும் போக்குதான் ஈழத்தமிழரின் தேசிய ஒருமைப்பாட்டுக்கான மிகப்பெரிய தடையாக இன்று ஈழத்தமிழரின் அரசியல் உலகில் உள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும் கடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட்ட அமெரிக்காவின் முன்னாள் துணை அரசத்தலைவர் கமலா ஹரிஸ் அவர்கள் தான் அரசத்தலைவர் தேர்தலுக்குப் பரப்புரை செய்த நாட்களின் அனுபவத்தை "107 நாட்கள்" என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். இந்த நூல் சொந்தக் கட்சிக்குள்ளேயே ஒருவர் பெண் என்ற நிலையில் அனுபவித்த வேதனைகளை மட்டுமல்லாது சொந்தக் கட்சிக்காரரே எவ்வாறு ஒருவரின் வெற்றிக்கு எதிர்வினையாற்றுவர்கள் என்பதைத் தெளிவாக்கியுள்ளது. ஈழத்தமிழர்கள் இதனை வாங்கிப்படித்தால் தாங்களும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவர் ஒரு இடத்தில் தன்னுடைய இனநிலையை ட்ரம்ப் தாக்கு பொருளாக்கிய பொழுது தான் அமைதியாக இருந்தமைக்குக் காரணம் அதற்குப் பதிலளித்திருந்தால் ட்ரம்ப் நீ பெண்ணல்ல என்றால் அதனை நிரூபிக்க நான் பெண்ணுறுப்பைக் காட்சிப்படுத்த வேண்டி வந்திருக்கும் என்று கிண்டலாக எழுதியுள்ளார். இத்தகைய மனப்போக்கில்தான் ஈழத்தமிழர்கள் பலரும் இன்று முற்றுரிமை கொண்டாடுபவர்களுக்கு பதிலளிக்காமல் இருக்கின்றார்கள்.

பிரித்தானிய பிரதமரும் அமெரிக்க அரச அதிபரும் செக்கர்ஸ் எஸ்டேட்டில் செய்தியாளர்களுடன் உரையாடிய பொழுது "புதிய சகாப்தம் - புதிய தலைமைத்துவம் தேவை" என்ற உண்மையை உலகுக்குத் தெளிவாக்கினர். அந்நேரத்தில் பிரித்தானியப் பிரதமர் தான் பலஸ்தீனிய விடயத்தில் அமெரிக்காவுடன் முரண்படுவதாகவும் இருதேச முறைமையை பிரித்தானியா நடைமுறைப்படுத்த முனையும் என்று கூறி விட்டு ஆனால் பயங்கரவாத இயக்கமான ஹமாஸ் ஆட்சியில் எந்தப் பங்கையும் வகிக்க பிரித்தானியா அனுமதிக்க மாட்டாது எனவும் தெளிவாகக் கூறினார். இந்நிலையில் உலகில் பயங்கரவாத இயக்கங்கள் எனப் பட்டியிலிடப்பட்ட இயக்கங்கள் தங்களை மீளவும் உலக முறைமைக்குள் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது இன்றைய காலத்தின் தேவை என்பது இவர்களுடைய உரையில் தெளிவாக்கப்பட்டுள்ளமை முக்கியமான விடயம். அத்துடன் இன்று பிரித்தானிய அமெரிக்க உறவு தனியான விசேடமானது என பிரித்தானிய அரசரும் அமெரிக்க அரசத்தலைவரும் பிரகடனப்படுத்திய பொழுது அது 250 பில்லியன் டொலர் பெறுமதியான "டெக்" வளர்ச்சியின் மூலமே அந்நிலை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. இவ்விடத்தில் டெக் என்பது சமகாலத்தில் வேகமாகப் பரவும் செயற்கை நுண்ணறிவு வழியான தொழில்துறைக்கு வர்த்தகத்துக்கு சமூக வாழ்வுக்கு உதவக்கூடிய முறைமையைத் தளத்தை உருவாக்கும் கம்பெனிகளையே குறிக்கிறது. இதனால் இன்றைய உலகு பில்லியன் மில்லியன் முதலீட்டாளர்களின் உச்ச இலாபத்தையே சமூக பொருளாதார அரசியல் ஆன்மிக வளர்ச்சியாக முன்னெடுக்கிறது என்ற வகையில் இதற்கு ஏற்ப செயற்பட வேண்டிய பொறுப்பு ஈழத்தமிழர்களுக்கு உள்ளதென்பதாலேயே இலக்கு செயலணிகளை அமைத்து செயற்படுவதற்கான அழைப்பை பலமாக எழுப்புகிறது. அத்துடன் இருவரிடையான நேரடி உடன்படிக்கை வழியாகவே இவை நடைமுறைச் சாத்தியமாகும் என்பதையும் அமெரிக்க பிரித்தானிய தலைவர்களின் சந்திப்பு உறுதியாக்கியுள்ள நேரத்தில் ஒவ்வொரு துறையினரையும் இணைக்கும் பலம் பொருந்திய டெக் ஹப் காலத்தின் தேவை என்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

ஆசிரியர்

# ஈகம் சிலிர்த்திட – உயிர் யாகம் வளர்த்தவன்

ஈகம் சிலிர்த்திட – உயிர் யாகம்
வளர்த்தவன்
தாகம் தமிழீழம் ஒன்றே என்று
தாகம் மறந்து நீர் துறந்தாயே – பெரு
யாகம் வளர்த்து வயிற்றினில் – பசித்
தீயினை மூட்டி மூசவிட்டாயே.

வேகம் கொண்ட வேங்கைப்புலி – இலட்சிய
வேட்கைதனை விழுதெனப் பற்றி
ஈகம் ஒருமுறை சிலிர்த்து எழுந்திட – உன்
தேகம் எரித்துச் சிதையிலிட்டாயே

வேந்தன் கரிகாலன் தொடக்கிய வேள்வியை
வேண்டித் தொடர்ந்தாய் விடுதலை தேடியே
அண்ணன் குணங்கொண்ட தம்பியாய் அன்று
ஆவி துடிக்க அகிம்சையில்க் குதித்தாயே

போர்க்களம் பலவற்றில் புயலென நின்றவன் –
விழுப்
புண்ணேந்தி வயிற்றிலே வலிகண்டு
நிமிர்ந்தவன்
வீரத்தழும்பொன்று கையிலும் கொண்டவன்
வீரியம் மட்டும் குன்றிடாப் புலியவன்

ஊரெழு மண்ணில் தோன்றிய ஊற்றவன்
பெயர் சொல்லப் பிறந்த எழுச்சியின் நாற்றவன்
கார்த்திகை இருபத்தேழு கண்திறந்த காவியன்
– புலி
புதுப் போரியல் காட்டி புரட்சித்த பார்த்தீபன்.

இளமையின் துடிப்பைத் தமிழர்க்காய்த் தந்தாய்
இனிய உன் நாட்கள் தமிழுக்கே என்றாய்
படித்த வைத்தியப் படிப்பினை விட்டு
பாயும் புலியணிப் பயிற்சிகள் பெற்றாய்

நடை உடை பாவனை அனைத்திலும் எளிமை
உடையவனாக நீ வலம் வந்தாய் – வலிமை
படைத்த உன் செயல்களால் வளர்ந்தாய்
கிடைத்தற்கரியவன் ஆனாய் அண்ணா

அரசியல் என்பது மக்கள் தொண்டென்றாய்
அருகிருந்து அவர்களின் துயர்கள் துடைத்தாய்
பெரும் பெரும் குழப்பமும் இலகுவிற் தீர்த்தாய்
சிறியவனாகிலும் "பெருமகன்" ஆனாய்.

மேடையில் முழங்கிடும் உன் குரல் கேட்க
ஓடிவந்திடும் யாழ்மண்ணே திரளாய்
வாடிய முகங்களும் பூத்திடும் உன்னாலே –
ஊருக்கு
ஓடி ஓடி நீ உழைத்தாய் தன்னாலே

கிட்டண்ணாவின் கிட்டிய தோழனே – உந்தன்



நட்புக் கிட்டிட மகிழ்ந்தனர் தோழரே
புன்னகை ததும்பிடும் புலிமகன் திலீபனே
உன்னை இழந்திட ஏற்குமோ தமிழ்த்தேசமே

நல்லூர்க்கந்தன் வடக்கு வீதியில்
நம்பிக்கையோடு தொடங்கினாய் நோன்பு
கடலென மக்கள் கூட்டம் உன்முன்பு
கண்ணீர் சொரிந்தது கலங்கித்தவித்தது

கவிமழையால் உனைத் தழுவியே நின்றது
கந்தனை வேண்டியே விரதங்கள் தொடந்து
விரைவினில் நீ நலம்பெறவென்றே
விண்ணும் பொழிந்தது மண்ணும் கரைந்தது

உயிர் பெற்றதெதற்கு ஊற்றிடத்தானோ – நீ
உடல் கொண்டதெதற்கு உருகிடத்தானோ – நீ
உரைத்தவையெல்லாம் உரிமையின் கவியோ
உறுதியின் உருவே நீ புரட்சியின் குயிலோ

மறப்போர்ப்படையில் நீ ஒரு தனிப்படை
மானம் காத்திட செய்தாய் உயிர்க்கொடை
அறப்போர் தொடுத்து அமைதியாய்
அணைந்தாயோ
அகிம்சையே வெட்கி அடங்க உறைந்தாயோ

சுயநலனுக்காய் நீ கேட்டதேதுமில்லை
சுடரும் வீரனே நீ தலைவனின் உயரிய
பிள்ளை
சுய நினைவகன்றபோதும் சொட்டு நீர்
கேட்கவில்லை – உன் வாயோ
"சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்பதை
மறக்கவில்லை

இந்திய நாடே இழிசெயல் செய்தது – குருதி
சிந்திய எங்களைக் குறைத்து மதித்தது – தமிழ்ச்
சந்ததி தன்னை அழிக்க நினைத்தது
வெந்திட்ட புண்ணிலே வேலினை எறிந்தது

அகிம்சையின் தேசமே எங்கள் திலீபனைக்
கொன்றது
ஐந்தம்சக் கோரிக்கையைத் தீயிலே போட்டது
வரலாற்றில் அழியாப் பிழையினைப் புரிந்தது
வஞ்சகத்தாலே தான் விலை போனது

சத்தியம் தோற்று சாவிலே வீழ்ந்தது – எம்
சத்தியன் நெஞ்சமோ சலனத்தைக் கடந்தது
சத்திய யுத்தத்தை சாத்வீக வழியிலே
சாத்தியமாக்கினான் சயனித்தான் வீரமகன்.

காலனை வென்ற கம்பீரத் தகையோனே
காலங்கள் சொல்லும் உன்கதை திலீபனே
ஞாலத்தில் உன்போல் ஈகையர் காண்கிலோம்
ஞாயிறைப் போன்றனன் நீயேதான்
அண்ணனே

அறுதியும் உறுதியும் எம்வசம் தந்து
ஆகுதியாகி நீ மடிந்தாயே அன்று
மறுகிடும் மனங்களில் தீ வளர்க்கின்றோம்
மறுபடி மறுபடி முயல்கிறோம் விரைகிறோம்

விடுதலை விடுதலை என்றே நெஞ்சம்
விம்மித் தணிந்திடும் ஒவ்வோர் கணமும்
விடியலின் ஒளியாகி வழிகாட்டும் திலீபா நீ
விரும்பிய விடுதலை பெறும் வரை ஓயோம்

மானசீகமாய் நீ நேசித்த சுதந்திரம்
மாற்றங்களோடு நிச்சயம் மலரும்
மாண்ட எம் வீரர் கனவு பலிக்கும்
வேண்டிடும் தாய்மடி ஒரு நாட் புலரும்

பிரளயம் ஒன்று வெடிக்கும் – பகை
பிளந்து தமிழினம் வெற்றி படைக்கும்
களத்திடை வீரம் துடிக்கும் – புலிப்படை
கயவர்கள் கொட்டத்தை உடைக்கும் – திலீபன்
நீ

முழங்கிய புரட்சி வெடிக்கும் – மக்கள்
எழுச்சியில் சிங்களம் புதுக்கதை படிக்கும்
விழுந்தவர் எழுந்திட விடிவெள்ளி முளைக்கும்
– தலைவர்
வழித்தடம் பற்றியே தமிழீழம் கிடைக்கும்

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

–அரியாத்தை–

கட்டுரை



# ஐ.நா.வில் புதிய வரைவு யாருக்கு வெற்றி

விதுரன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு நடைபெற்று வருகையில், பிரித்தானியா தலைமையில் கனடா, மாலாவி, மொன்டேனெக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் ‘இலங்கையில் மனித நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்’ எனும் தலைப்பில், இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் வரைவு *(A/u;RC/60/L.1)* சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வரைவானது, 2027 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறும் 66ஆவது அமர்விலேயே இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால் அதுவரை இலங்கைக்கு காலஅவகாசத்தை அளிக்க வேண்டும் என்று கூறுகின்றது.



அதற்கிடையில், பேரவையின் 61ஆவது மற்றும் 64ஆவது அமர்வுகளில் வாய்மொழி அறிக்கைகளையும், 63ஆவது அமர்வில் எழுத்துமூல அறிக்கையும், 66ஆவது அமர்வில் இறுதி அறிக்கையையும், ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் சமர்ப்பிக்க வேண்டும் என்று இந்த வரைவு கால அட்டவணையை குறிப்பிட்டுள்ளது.

கடந்த கால தீர்மானங்களின் தொடர்ச்சியாக, கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த வரைவு பொதுப்படையில் ‘ஆகக்குறைந்த மென்மை யான உள்ளடக்கப் பெறுமானங்களைக் கொண்டிருக்கின்றபோதும்’ பெரும் விவாதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

குறித்த வரைவு ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ஆணையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்குமாறு கோருகின்ற நிலையில் ஆணை வழங்கும் காலப்பகுதி எவ்வாறாக இருப்பினும் முதலில் குறித்த வரைவை மையப்படுத்திய தீர்மானம் நிறைவேற்றப்படுமா என்பதில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுகிறது.

ஏனெனில், இலங்கையில் ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான புதிய அரசாங்கம் ‘உள்நாட்டுப் பொறிமுறைகள்’ மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம், பொறுப்புக்கூறல் செய்யப்படலாம் என்று உறுதியளித்துள்ளதால், பல நாடுகள் அந்த வாக்குறுதியை நம்புவதற்குக் தயாராக இருக்கின்றன. இது இலங்கை மீதான புதிய தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டுவதில் சவாலான நிலைமையை தோற்றுவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் மொத்தம் 47உறுப்பு நாடுகள் வாக்களிக்க தகுதி பெற்றவையாக உள்ளன. அவற்றில், 13 நாடுகள் வரை மட்டுமே இலங்கைக்கு நேரடியாக ஆதரவளிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவை ஆசிய-பசுபிக், ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளாக இருக்கலாம் என்பதும் எதிர்பார்ப்புத்தான்.

பல நாடுகள், தாங்கள் எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்ள நேரிடலாம் என்ற அச்சத்தில் இலங்கைக்கு ஆதரவாக நிற்கின்றன. இது தீர்மானத்தை நிறைவேற்ற விரும்பும் நாடுகளுக்கு பெரும் தடையாக உள்ளது.

பிரேரணையைக் கொண்டுவருவதற்கு இணை அனுசரணை வழங்கும் நாடுகளின் தலைமையாளரான பிரித்தானியாவும் கனடாவும் கூட அமெரிக்காவின் ஆதரவை எதிர்பார்க்கின்றன. ஆனால், அமெரிக்கா தற்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கவில்லை.



இது இணை அனுசரணை நாடுகளின் இராஜதந்திர பலத்தை வெகுவாகக் குறைக்கிறது. இருப்பினும், பிரித்தானியா தம்மால் கொண்டுவரப்பட்ட வரைவு தீர்மானமாக நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றது. கள நிலைமையைப் பார்க்கையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இம்முறை இலங்கை குறித்த புதிய பிரேரணையை நிறைவேற்றுவதற்குப் போதிய வாக்குகளைப் பெறுவது கடினமானதாக உள்ளது.

பல நாடுகள் தத்தமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் சர்வதேசத் தலையீட்டை விரும்பாததால், இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கின்றன. இதனால், குறைந்தபட்சம் ஒரு பிரேரணையை நிறைவேற்றுவதற்காக, அதன் உள்ளடக்கத்தை நீர்த்துப் போகச் செய்ய வேண்டிய துரதிஷ்டமான நிலைமை தோன்றியுள்ளது.

எவ்வாறாயினும், தீர்மானம் பலவீனமானதாக இருந்தாலும், அது நிறைவேற்றப்படுவது மிக முக்கியம். ஏனெனில், இதுவே ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் இலங்கையின் மனித உரிமை நிலைமையை தொடர்ந்து கண்காணிப்பதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் தீர்மான நிறைவேற்றம் அவசியமானதாகும்.

அவ்வாறில்லாத பட்சத்தில், 2012ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மீது தொடர்ந்து வரும் கண்காணிப்பு நிறுத்தப்படும், அது இலங்கையின் பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கு பெரும் பின்னடைவாக அமையும். அதேநேரம், இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் விடயம் சர்வதேச அரங்கிலிருந்தே அகற்றப்பட்டுவிடும் பேராபத்தும் உள்ளது.

அடுத்தபடியாக, புதிய வரைவின் உள்ளடகத்தைப் பார்க்கின்றபோது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாகவே உள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள், கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச சுயாதீன நீதிமன்றப் பொறிமுறை நிறுவப்பட வேண்டும் என்றே நீண்ட காலமாக கோரி வருகின்றனர்.

அத்தகைய பொறிமுறையில், சர்வதேச வழக்கறிஞர்கள், நீதிபதிகள் மற்றும் ஆய்வாளர்கள் உள்ளடங்குவர். பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டுப் பொறிமுறைகளின் மீது நம்பிக்கை இல்லாத நிலைமையே உள்ளது.

இலங்கையின் நீதித்துறை மற்றும் சட்ட அமுலாக்கல் துறைகள் வெகுவாக ஆட்சியில் உள்ள மற்றும் எதிரணியில் உள்ள அரசியல் தரப்புக்களின் ‘அரசியல் தாக்கங்களுக்கு’ உட்பட்டவை, அவை நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளன. தற்போதும் தவறியே வருகின்றன என்பது பாதிக்கப்பட்ட தரப்பினர் வெளிப்படையாக உறுதிப்படுத்தக்கூடிய நிலைப்பாடாகும்.

ஆனால், புதிய வரைவானது, இலங்கையினுள் ஒரு பிரத்தியேக நீதித்துறை பொறிமுறையை நிறுவுமாறு இலங்கைஅரசாங்கத்திடம் கோருகிறது. அதாவது சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகமொன்றை ஸ்தாபிக்கும் இலங்கை அரசாங்கத்தின் முன்மொழிவை ஏற்றுக்கொள்வதாக கூறுகின்றது.

ஆகவே புதிய வரைவில் வலியுறுத்தப்பட்டுள்ள பொறிமுறை, பெரும்பாலும் உள்நாட்டு நீதித்துறை வழிமுறைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இந்த நிலைமையானது,

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# தமிழரின் தாகத்துக்கு உரம் சேர்த்த திலீபனின் தியாகம் ! 38ம், ஆண்டு நினைவு.!

பா. அரியநேத்திரன்

*தந்தை செல்வா 1949, டிசம்பர் 18ல் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியை ஆரம்பித்து அகிம்சைப் போராட்டம் மூலம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்காக போராடியபோது சிங்கள தேசம் கணக்கில் எடுக்கவில்லை தட்டிக்கழித்தமையால் 1976, மே14 ல் தமிழர் விடுதலைக்கூட்டணியை ஆரம்பித்து வட்டுக்கோட்டையில் சுதந்திர தமிழீழ தீர்மானத்தை நிறைவேற்றினார் இந்த தீர்மானம் நிறைவேற்றுவதற்கு சரியாக 09, தினங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை தலைவர் பிரபாகரன் 1976, மே 05ல் தோற்றுவித்தார்.*

*ஈழத்தின் யாழ்ப்பாணம், ஊரெழு எனும் ஊரில் 1963, நவம்பர் 27ல் அன்று பார்தீபன் எனும் குழந்தை இராசையா தம்பதிகளுக்குப் பிறந்தது. அந்த குழந்தைபாடசாலைமாணவனாக பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவனாக தெரிவானாலும் தமிழீழ விடுதலைப் புலிகளில் 1985, காலப்பகுதியில் 22 வயது இளைஞனாக தன்னை இணைத்துக் கொண்டு “திலீபன்” என்னும் நாமத்தைத் தனதாக்கிக்கொண்டார்.*






*போர்ப்பயிற்சிகளை நிறைவு செய்து வெளிவந்தபோது வலிகாமத்தின் ஒரு பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டு அப்பணியில் காட்டிய திறமை, ஈடுபாடு, விசுவாசம் என்பவற்றின் காரணமாக தலைமை அவரை யாழ் அரசியல்துறைப் பொறுப்பாளராக 1985ஆம் ஆண்டில் நியமித்தது. 1986இல் நடை பெற்ற முறியடிப்புச் சமர் ஒன்றில் வயிற்றில் விழுப்புண் பட்டு திலீபனின் சிறுகுடலின் ஒரு பகுதி சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.*

*1987,யூலை 29ல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் அமைதிப்படையாக இந்திய ராணுவம் கால் பதித்தது. ஈழ தமிழரின் பிரச்னையை தீர்க்க எனக் கூறி அந்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட போதும், அது தமிழர்களுடைய தேசிய பிரச்னையை தீர்ப்பதற்கும், தமிழர் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றின் அடிப் படையிலான அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்க வழிகோலவில்லை.*

*இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தமிழர்களுக்கு எதிராக பெரும் மனித உரிமை மீறல்களையும் அடக்கு முறைகளையும், தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றங்களையும் மிக வேகமாக தொடர்ந்தார். இந்திய அரசு தான், தமிழினப் பிரச்சனையில் தலையிட்டது, மக்களின் உரிமை பிரச்சனைக்கு உத்தரவாதம் அளித்தது, விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை ஒப்படைக்க வைத்தது. ஆகவே இந்திய அரசிடமே தமிழ் மக்களின் உரிமையைக்கோரி போராடுவதன் மூலம் நீதி பெறலாம் சிங்கள அரசிடம் தமிழ் இனப்பிரச்சனைக்கு நீதி கேட்பதில் பயன் இல்லை என முடிவெடுத்த விடுதலைப்புலிகளுடைய தலைமை உண்ணாவிரதம் மூலம் அகிம்சை போர் செய்ய முடிவெடுத்தனர்.காந்தீய வழியில் திலீபன் உண்ணாவிரதத்தில் தாமே இறங்க முன்வந்தார்.*




*மஹாத்மா காந்தியின் அகிம்சை தத்துவத்தைத் தனது அடிப்படை அரசியல் கொள்கையாக பறை சாற்றவே ஆயுதப்போராளியான திலீபன், அகிம்சை வழியில் 1987, செப்டம்பர் 15 செவ் வாய்கிழமை மு.ப.9.55, மணிக்கு அன்று ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து நீர் கூட அருந்தாமல் உண்ணா விரதப் போரை ஆரம்பித்தார். உண்ணாவிரதம் ஆரம்பிக்கமூன்று தினங்களுக்கு முன் கோரிக்கை அடங்கிய காகிதம் 1987, செப்டம்பர் 13ல் இந்திய உயர் ஸ்தானிகரின் கையில் நேரடியாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி 24 மணித்தியால கால அவகாசமும் கொடுத்திருந்தார்கள் ஆனால், 1987 ,செப்டம்பர் 15, காலை 09, மணி வரை எந்தப் பதிலும் தூதுவரிடமிருந்து கிடைக்காத காரணத்தினால் ஏற்பாடாகியிருந்த சாகும்வரை உண்ணாவிரதம் அன்று நல்லூர் கோயில் முன்றலில் ஆரம்பமானது.*

**திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள்.**

***1).மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.***

***2).சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.***

***3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.***

***4).ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.***

***5).தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.***



*இந்தியா இந்த கோரிக்கையில் ஒன்றைக்கூட காதில் வாங்க மறுத்தது. உறுதியுடன் தியாகி திலீபன் நல்லூர்க் கந்தன் வீதிகள் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிய, மக்கள் எல்லோரும் கண்ணீர் சிந்தியபடி விழித்திருக்க, மருத்துவ வசதிகளையும் ஏற்காது நீரும் அருந்தாது உண்ணாவிரதம் இருந்து உலகில் புதிய அத்தியாய மொன்றை சிருஷ்டித்து விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல, எம் இனத்திற்கே பெருமை சேர்த்தார். 24, வயது நிரம்பிய மருத்துவ பீட மாணவன் திலீபன் அவரின் தியாகப் பயணத்தினால், மக்கள் புரட்சியொன்று வெடித்தது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் ஆயுத மிரட்டலுக்கெதிராக, இவ் உண்ணா விரத நிகழ்வு, தாயக மக்களை விழிப்படைய வைத்தது. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான எழுச்சியை வளர்த்தது. திலீபனின் அறப்போராட்டதி ற்கு முன் இந்திய இராணுவமும் இந்திய அரசும் தோல்வி கண்டன. இந்திய இராணுவத்திற்கெதிராக மக்களினது*

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலை (காணாமலாக்கப்பட்டனர்)

வடக்குக் கிழக்கு தமிழர் தேசமெங்கும் பல்லாயிரம் தமிழ் மக்கள் காணாமலாக்கப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் தமிழின அழிப்பு நடந்தது என்பதற்குச் சாட்சியங்களாகப் பல துயரச் சம்பவங்களும் ஆதாரங்களும் காணப்பட்டாலும் எமக்கான நீதி இன்னும் கிடைத்தபாடில்லை ஆனாலும் என்றாவது ஒருநாள் எங்களுக்கான நீதி எமக்காக மண்ணில் விதையாகிப் போன ஒவ்வொரு உறவுகளின் உயிர்த் தியாகத்திலும் மீண்டும் முளைத்து வரும் எனும் நம்பிக்கையில் பிரார்த்தனைகளோடும் பிரயத்தனங்களோடும் பயணிக்கிறோம்.

கிழக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் நடந்து கொண்டிருந்த தமிழின படுகொலைகள், காணாமலாக்குதல் சம்பவங்களின் தொடர்ச்சியாக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சமடைந்த பொதுமக்கள் 158 பேர் இராணுவத்தினால் விசாரணைக்கு என அழைத்துச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட வரலாற்றுத் துயரம் நிகழ்ந்த 1990.09.05 அன்றைய நாளினை நினைத்து வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் இணைந்து பிரார்த்தனைகளையும் செய்து நீதிக்காகவும் குரல் கொடுத்து வருவது இன்றும் தொடர் கிறது.





158 உறவுகளும் காணாமலாக்கப்பட்டு, 35 வது ஆண்டு கடந்தும் இம்முறையும் நினைவேந்தல் நிகழ்வினை 2025.09.05 அன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டித்துப் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டனர் மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரும், பொது மக்களும், செயற்பாட்டாளர்களும் இவர்கள் இணைந்து வருடா வருடம் தமது உறவினர்களை நினைவுகூர்ந்து பிரார்த்தனை செய்து வந்தாலும் நீதிக்காகக் குரல் கொடுத்தாலும் இன்றுவரை நீதியுமில்லை, பரிகார நிவாரணமுமில்லை என்றாலும் நீதிக்கான எமது மக்களின் குரல் ஓயவில்லை.



1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருந்த நிலையில் பொலிஸ், இராணுவம் மற்றும் விஷேட அதிரடிப்படை முகாம்கள் விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு மோதல் தீவிரமடைந்திருந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி பாரிய இராணுவ நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் சில நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது நிலைகளைப் பலமாக அமைத்துக்கொண்டனர்.

இவ் இராணுவ நடவடிக்கையின் போது பல பகுதிகளையும் சேர்ந்த தமிழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி வழிபாட்டுத் தலங்கள் பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பாதுகாப்புக் கிடைக்கும் எனும் நம்பிக்கையில் தஞ்சமடைந்திருந்தனர்.

**தாமோதரம் பிரதீவன்,**
மனித உரிமை செயற்பாட்டாளர்,
ஆய்வாளர்,எழுத்தாளர்.

அவ்வாறு எமது மக்கள் தஞ்சம் பெற்ற இடங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல்கள் நடைபெற்றன. அங்கிருந்து விசாரணைக்கெனப் பலர் அழைத்துச் செல்லப்பட்டனர் ஆனால் அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட பலர் இதுவரை வீடு வந்து சேரவில்லை.



அவ்வாறு வலிந்து இராணுவத்தினரால் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்று 35 வருடங்கள் கடந்தும் தமது உறவுகள் உயிருடன் இருப்பார்கள் எனும் நம்பிக்கையில் உறவினர்கள் இருந்தாலும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது? எனும் கேள்விக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை அதனால் தமக்கான விடையும் அதற்கான பரிகார நீதியும் வேண்டும் என எமது மக்களின் கண்ணீரும், வலியும் நிறைந்த போராட்டங்கள் தொடருகின்றன.

இவ்வாறான நிலையில் தொடர்ந்தும் தமது உறவுகளின் நீதிக்காகக் குரல் கொடுத்து வந்த உறவுகள் கிழக்குப் பல்கலைக் கழக முகாமில் தஞ்சமடைந்திருந்தவர்களில் இராணுவத்தால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட 158 பேரும் காணாமல் ஆக்கப்பட்டாலும் அவர்கள் இன்னும்உயிருடன்இருப்பார்கள்எனும்நம்பிக்கை இழந்த நிலையில் உறவுகளால் மட்டக்களப்பு மாவட்டதில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதனால் கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் தஞ்சம் பெற்றிருந்த நிலையில் செப்டம்பர் 5 ஆம் திகதி இராணுவத்தால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்கான நாளை கிழக்குப் பல்கலைக் கழக படுகொலை நாள் என உள்ளூர் மக்களும், சமூக அமைப்புகளும் பிரகடனப்படுத, நினைவுகூருகின்றனர் என்பதும் விஷேடமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.



இச்சம்பவ தினம் காலை 6 மணிக்கு முன்னரே கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் இயங்கிய அகதி முகாம் இராணுவத்தினர் மற்றும் அவ்வேளை இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட சில ஆயுதக் குழுக்களாலும் சுற்றிவளைக்கப்பட்டது.

இச்சுற்றி வளைப்பை கொம்மாதுறை இராணுவ முகாமிலிருந்து வருகை தந்த இராணுவத்தினரேமேற்கொண்டனர், இச்சுற்றிவளைப்பில் அவ்வேளை இராணுவ புலனாய்வில் செயற்பட்ட கப்டன் முனாஸ் (றிச்சட் டயஸ்), கப்டன் பாலித, கப்டன் குணரத்னா, மேஜர் மஜீத், புளொட் மோகன் ஆகியோரும் வந்திருந்தாக காணாமல் போனோர் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணையின் போது சாட்சியமளித்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமுக்குப் பொறுப்பாகப் பேராசிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி த.ஜெயசிங்கம், கலாநிதி வி.சிவலிங்கம் ஆகியோர் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்திய பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறி

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

கட்டுரை

# தமிழ்த் தேசியத்துக்கு 'சிவப்பு' சமிக்ஞை

**விதுரன்**

ராஜபக்ஷக்களின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ஒரு சிலஅரசியல்கூட்டங்கள்உள்ளிட்டநிகழ்வுகளுக்கு வருகின்றபோது, கோட்டா வருகிறார் என்ற சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டதும், அவரது மூத்த சகோதரர்களான சமல், மஹிந்த, பஷில் உட்பட அரசியல்வாதிகள் மயான அமைதிக்குள் சென்றுவிடுவார்கள்.

2022இல் அரகலய போராட்டத்தின் காரணமாக நாட்டை விட்டு தப்பியோடும் வரையில் 'கோட்டா' என்றால் அச்சமானதொரு 'பிம்பம்' நீடித்திருந்தது. குறித்த பிம்பம் செயற்கையாக கட்டியெழுப்பப்பட்டதா இல்லை இயல்பானதா என்பது விவாதத்துக்குரியது.



ஆனால் ராஜபக்ஷக்களின் மிகமோசமான யுகம் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் தற்போது ஜே.வி.பி.எனபடும் மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சியுகம் ஆரம்பித்திருக்கின்றது. இந்த ஆட்சியிலும் 'கோட்டா' போன்ற தொரு 'பிம்பம்' ரில்வின் சில்வா மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

ரில்வினைப் பொறுத்தவரையில் எந்தவொரு ஆட்சியதிகாரக் கட்டமைப்புக்களின் பொறுப்பான பதவி நிலைகளில் அவர் இல்லை. தேசிய மக்கள் சக்தியின் 159பாராளுமன்ற உறுப்பினர்களின் நியமனத்திலோ, நீக்கத்திலோ செல்வாக்குச்செலுத்தவல்ல கையொப்ப அதிகாரம் கூட அவரிடம் இல்லை. அது நிஹால் அபேசிங்க விடத்தில் தான் உள்ளது.

ஆனால்,ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்க முதல் அத்தனை மக்களாணை பெற்றுவந்த பிரதிநிதிகளையும் ஆட்டிப்படைக்கும் அதிகாரம் 'ரில்வின் சில்வா' என்ற தனிநபரிடம் தான் உள்ளது. அதற்காக அவரிடத்தில் காணப்படுகின்ற ஒரேயொரு பதவி நிலை 'ஜே.வி.பியின் பொதுச் செயலாளர்' என்பதே ஆகும்.

இதற்கு ஜே.வி.பி.யிடம் காணப்படும் வலுவான 'கட்சிக் கட்டமைப்பு' அடிப்படைக் காரணமாக அமைந்தாலும், அதற்கும் அப்பால் தற்போது 69வயதாகும் ரில்வின், 22வயதில் ஜே.வி.பியில் இணைந்திருந்ததோடு, ரோஹண விஜேவீர, சோமவன்ச அமரசிங்க ஆகியோருக்குப் பின்னர் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் நீண்டகாலமாக கொள்கைப்பற்றுறுதியுடன் செயற்பட்டு வருகின்றமையும் பிறிதொரு காரணியாகின்றது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீனாவுக்கான தனது பயணத்தின்போது சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான 'கட்சி சார்ந்த பரஸ்பர உடன்படிக்கையொன்றை மேற் கொண்டிருந்தார். இந்த உடன்படிக்கையின் காரணகர்த்தா ரில்வின் சில்வா தான் என்பது கையொப்பம் இட்டதன் பின்னரே முதலில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் காதுகளுக்குச் சென்றது.

அவர் நேரடியாக, பெலவத்தவில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்துக்குச் சென்று ரில்வினுடன் 'நட்பு' ரீதியாக கைகுலுக்கி சந்திப்பை மேற்கொண்டிருந்தார். இதன் பின்னர் தான் மேற்குலக இராஜதந்திரிகள் ரில்வினுடன் சந்திப்பை நடத்துவதை வழக்கமாக தற்போது கொள்ள ஆரம்பித்திருக்கின்றார்கள்.

அந்த வகையில் இறுதியாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் கூட பாதிக்கப்பட்ட மக்களை அழைத்து தான் தங்கிருந்த விடுதியில் வைத்து சந்தித்தவர், ஆனால் ரில்வினை அவரது கட்சியின் தலைமையகத்துச் சென்று சந்தித்திருந்தார்.

தற்போதைய ஆட்சியில் ரில்வின் சில்வா 'திரைமறைவு அரசியல் சக்தியாகி' உள்ள நிலையில், அவர் கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயமானது பெரிதாக அலட்டிக்கொள்ளப்படாத ஒன்றாகவே உள்ளது.



குறிப்பாக, செம்மணி மனிதப்புதைகுழி விவகாரங்கள், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் ஆரம்பம், மாகாண சபைகளுக்கான தேர்தலை வலியுறுத்தல் என்ற ஆரவாரங்களுக்குள் சிக்கியிருக்கையில் தான் ரில்வின் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தார்.

ரில்வின் யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கு ஒருசில நாட்களுக்கு முன்னதாகத் தான் ஜனாதிபதி அநுரகுமார மயிலிட்டித்துறைமுகம், சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றுக்கான அங்குரார்ப்பணங்களையும், கச்சதீவுக்கான விஜயத்தையும் நிறைவு செய்து கொண்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி, பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பின்னர் ரில்வின் சில்வா யாழ்ப்பாணத்துக்குச் செய்கின்ற முதலாவது விஜயமாக இது இருக்கின்றது. ரில்வினின் இந்த விஜயம் பற்றி பெரிய அவதானங்கள் செலுத்தப்படவில்லை. அவருடைய முகநூலில் கூட அதுபற்றி வெளிப்படுத்தபடவில்லை. ஊடகங்களிலும் முக்கிய இடத்தை வகிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் வடக்கில் யாழ்ப்பாணத்தில் 27,086வாக்குகளும், வன்னியில் 21,412 வாக்குகளும்; பெற்றிருந்த தேசிய மக்கள் சக்தி, பாராளுமன்ற தேர்தலில் ஐந்து ஆசனங்களை தனதாக்கியிருந்தது. பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அனைத்து சபைகளி லும் உறுப்பினர்களைப் பெற்றிருந்தது.

இந்த முடிவுகள், வழக்கமாக அரசாங்கத்தின் பக்கம் செல்கின்ற வாக்குகளின் அடிப்படையிலானவை என்று தான் தமிழ்த் தேசியக் கட்சிகள்அர்த்தம்கற்பித்திருந்தன. அதுமட்டுமன்றி, இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணி, தமிழ்த்தேசிய மக்கள்முன்னணி ஆகிய மூன்று தரப்பும் பெற்றுக்கொண்ட வாக்குகளையும், உறுப்பினர்களின் எண்ணிக்கையும் காண்பித்து தமிழ் மக்கள் 'தமிழ்த் தேசியத்துடன்' இருக்கின்றார்கள் என்றும் வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால், கிட்டிய காலத்துக்கு தேர்தல் இல்லை என்ற நிலைமைகள் தற்போது வெளிப்பட்ட நிலையில் பெயரளவில் மாகாண சபைத் தேர்தலுக்கான கோரிக்கையை வெளிப்படுத்திய வாறு கட்சி ரீதியான அரசியல் செயற்பாடுகளுக்கு 'தற்காலிக ஓய்வினை' தாங்களாகவே எடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தாங்களாக ஏற் படுத்தியுள்ள இடைவெளியை தற்போது ஜே.வி.பி இலாவகமாக பயன்படுத்தவே முனைகிறது. ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் தேர்தல்கள் காலத்தில் மாத்திரம் தொகுதிக் கூட்டங்களை நடத்துவது, மக்கள் சந்திப்புக்களை நடத்துவது போன்ற 'தேர்தல் அரசியலை மையப்படுத்துகின்ற' கட்சி அல்ல.



அதுதொடர்ச்சியாகவே இயங்கு நிலையில் இருக்கின்றதொரு அரசியல் இயக்கம். அதன்காரணமாகவே, யாழ்ப்பாணத்துக்கு சந்திரசேகரரையும், வன்னிக்கு பிமல் ரத்நாயக்கவையும் பொறுப்பாளர்களாக நியமித்து தொடர்ச்சியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக, வடக்கில் உள்ள சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் சில சமூகத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. உதாரணமாக, விவசாயிகளின் பிரச்சினைகள், இளைஞர் வேலையின்மை, போதைப்பொருள் பாவனை போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி, அதற்கான தீர்வுகளை முன்வைக்கின்றனர். இது உள்ளூர் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அச்செயற்பாடுகளில் மிக முக்கியமானது கிராமிய மட்டங்களில் இளைஞர் அணிகளை உருவாக்குவதாகும். இளையோர் ஒரு நாட்டின்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

நேர்காணல்

# தமிழ்க் கட்சிகளின் தெருச் சண்டைக்குள் காணாமல் ஆக்கப்படும் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமை

உயிரோடைத் தமிழ் வானொலிக்கு ஆய்வாளரும் எழுத்தாளருமான திரு. ஸ்ரீஞானேஸ்வரன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTubeஇல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.



**ஐநாவின் 60வது அமர்வில் தமிழர் உரிமைகள் குறித்த கோ-குரூப்பின் 'ஜீரோ டிராப்ட்' முன்மொழிவில் "தமிழர் என்ற சொல்கூட இல்லாத நிலையில், தமிழர்கள் சிங்களக் கட்சிக்கு வாக்களிப்பதால் உருவாகும் ஆபத்துகள் என்ன?**

விஜித ஹேரத்தின் ஜெனீவா வருகை முக்கியமானது. அவர் ஒரு மாதமாக அங்கு தங்கி, தமிழ் மக்களின் முயற்சிகளைதகர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அவர்களின் வாதம்: "தமிழர் வடக்கிலும் கிழக்கிலும் எங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். எனவே எங்களால் முன்வைக்கப்படும் சட்ட நடவடிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்." ஆனால் இது மாயையான கூற்று. மொத்த வாக்குகளை விட அதிக ஆசனங்களை பெற்றதால்தான் இந்த முன்மொழிவு சாத்தியமாகியுள்ளது. தமிழ் மக்கள் மொத்த வாக்கு அடிப்படையில் இன்னும் தமிழ் தேசியத்தையே ஆதரிக்கிறார்கள்.

இதை பயன்படுத்தி ஜே.வி.பி. உலகம் முழுவதும் "தமிழர்கள் சுயநிர்ணய உரிமையை கைவிட்டனர்" எனப் பிரசாரம்செய்கிறது. பன்னாட்டு சட்டத்தின் அடிப்படையில் இது ஆபத்தானது, ஏனெனில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும்மக்களுக்கு வழங்கப்படும் உரிமையை குறைக்கும் முயற்சியாகும்.

ஜே.வி.பி. பௌத்த சிங்கள பேரினவாதத்தின் பிரதிநிதியாக, அரசியல் ஒருங்கிணைப்பை முன்னெடுக்கிறது. இதற்கு பன்னாட்டு அரசுகளின் மறைமுக ஆதரவும் உள்ளது.

வடக்கு மக்களிடையே தமிழ் கட்சிகளின் முரண்பாடுகள் அதிருப்தியை உருவாக்கியதால், சிலர் ஜே.வி.பி. வேட்பாளர்களைத் தேர்வு செய்தனர்; இதை ஜே.வி.பி. தங்கள் அரசியல் திட்டத்துக்குப் பயன்படுத்துகிறது.

வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலை சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் போராட்டமாக மாற்ற வேண்டும்.

தேர்தல் அறிக்கையில் சுயநிர்ணயக் கொள்கையை தெளிவாகக் கொண்டுள்ள கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

"பொங்கு தமிழ்", "எழுக தமிழ்" போன்ற பெரும் மக்களெழுச்சிப் பணிகளை மேற்கொண்டு, "நாங்கள் இன்னும் சுயநிர்ணயத்திற்காக போராடுகிறோம்" என்ற செய்தியை உலகிற்கு வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு செயல்பட்டால் மட்டுமே தமிழர் சுயநிர்ணய உரிமையை பன்னாட்டு அளவில் பாதுகாக்கவும் வலுப்படுத்தவும் முடியும்.

**ஜே.வி.பி. தலைமையில் சுவிட்சர்லாந்தில் தமிழ் கட்சிகளுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடப்பது குறித்து நீங்கள் ஏதேனும் அறிந்தீர்களா?**

நான் உள்ளக பேச்சுவார்த்தைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை முழுமையாக அறியவில்லை. ஆனால் இப்படியான செயல்பாடுகள் நடந்து வருகின்றன என்பதை உணர்கிறேன்.

இதற்கு எடுத்துக்காட்டாக, ஈழத்தின் முக்கிய ஊடகவியலாளர் திரு நிக்சன் அவர்கள் தனது முகநூலில் ஒரு பதிவுவெளியிட்டுள்ளார். சில ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரில் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பிறகு "இமாலயபிரகடனம்" வெளியானது. அப்போது தமிழ் தேசியத்துக்கு எதிரான சூட்சுமமான நடவடிக்கைகள் நடந்தன. அதேபோலஇன்றும் அதேவிதமான ஒரு மறைமுக நடவடிக்கை நடைபெறுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவாவில் மனித உரிமை அமர்வு நடந்து கொண்டிருக்கும்போது, எங்கள் தமிழ் அரசியல் பிரதிநிதிகள்ஜே.வி.பி.யுடன் கலந்துரையாடல் நடத்துவது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியதாக நான் நினைக்கிறேன். இந்தசந்திப்பை அவர்கள், "தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம்" என்ற சான்றாக சர்வதேசமேடையில் முன்வைக்க வாய்ப்பு உள்ளது. நாம் அந்த வாய்ப்பைத் தர வேண்டிய அவசியமில்லை.

அமர்வு தொடங்குவதற்கு முன்பே வடகிழக்கில் சில காணிகள் விடுவிக்கப்பட்டது போல, இது ஒரு அரசியல்நடவடிக்கையாக பயன்படுத்தப்படலாம். 'கோ-குரூப்' வெளியிட்ட முதலாவது "ஜீரோ டிராப்ட்" பரிந்துரையில் கூட"தமிழ் மக்கள்" அல்லது அவர்களுக்கு ஏற்பட்ட அநீதி பற்றிய குறிப்பே இல்லை. அதையும் இலங்கை பிரதிநிதிகள்ஏற்க மறுக்கின்றனர். இறுதியில், அமர்வு முடிவில் வெளியாகும் தீர்மானமே முக்கியம்; அதில் என்ன வரும் என்பதுஇன்னும் உறுதி இல்லை.

**திராக்கி சிவராம் கூறிய "ஈழதமிழ் மக்கள் பெற்றவை அனைத்தும் போராட்டத்தின் மூலம் பெற்றவை; பேச்சுவார்த்தையால் பெறப்படவில்லை" என்ற கருத்து சரிதானா?**

பெரும் பணச் செலவில் லோபியிங் நடந்தாலும், 'ஜீரோ டிராப்ட்' பரிந்துரையில் குறிப்பிடத்தக்க எதுவும் இல்லை. இந்த லோபியிங் இன்னும் இரு ஆண்டுகள் நீளும் போலத் தெரிகிறது. ஆகவே, இந்த காலத்தில் நாம் நம்முடையசக்தியை ஒரு திடமான போராட்ட நிலைக்கு நகர்த்தி, "நாங்கள் உங்களை இனி நம்பமாட்டோம்; நீங்கள் எங்களை ஏமாற்றுகிறீர்கள்" என்று சர்வதேச அளவில் வலியுறுத்த வேண்டும்.

எடுத்துக்காட்டாக, பிடிஏ (PTA) நீக்கம் கோரியுள்ள கடிதத்திலும், அதன் அடிப்படை காரணமான ஆறாவது திருத்தச்சட்டம் (Sixth Amendment) நீக்கப்படாவிட்டால், அரசு மற்றொரு சட்டத்தை (உதா: ATA) கொண்டு வர முடியும். இதற்கெதிராகவே நாம் உண்மையான போராட்டம் நடத்த வேண்டும்.

இதே நேரத்தில், புலம்பெயர் சமூகத்தில் உள்ள 50-க்கும் மேற்பட்ட அமைப்புகள், ஐ.நா. சபைக்கும்உறுப்புநாடுகளுக்கும் தங்களின் கூட்டு அறிக்கையை நேற்று வழங்கியுள்ளன. ஜெனீவா அமர்வு நிறைவடைய இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன.

**ஐநா அமர்வு முடிவடையும் நிலையில், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வழங்கிய பெரிய அறிக்கைக்குப் பிறகு, சுயநிர்ணய உரிமை மற்றும் வாக்களிப்பு விழிப்புணர்வைப் பற்றி தாயக செயற்பாட்டாளர்களாகிய நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இந்தச் சூழலில், நான் புலம்பெயர் அமைப்புகளிடம் வைக்கும் வேண்டுகோள் ஒன்றே:

நீங்கள் தனித்தனியாக இயங்கினாலும், ஒரு முக்கியமான பொதுவான இலக்குக்காக அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

சமீபத்தில் 58-க்கும் மேற்பட்ட அமைப்புகள் கையெழுத்திட்ட சிறந்த கூட்டு அறிக்கை அதற்குக் கணிசமானஉதாரணம். அந்தக் கடிதம் சரியானதாக இருக்கும் போது, அனைவரும் ஒருமனதாக கையெழுத்திட்டீர்கள். இப்படிப்பட்ட ஒற்றுமை முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்வது அவசியம்.

நீங்கள் தனித்தனி நோக்கங்களுடன் இயங்கினாலும், "எல்லா பாதையும் தமிழீழத்துக்கே" என்ற நோக்கத்தில்பொதுவான பிரச்சினைகளில் ஒன்றிணையுங்கள்.

நமது மறைந்த தலைவர்கள் சொன்னது போல, அந்தப் பொறுப்பு எவருக்கும் தனிப்பட்ட முறையில்கொடுக்கப்படவில்லை; மண்ணின் பொறுப்பாகவே இருக்கிறது. அதனை அனைவரும் சேர்ந்து ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சமீபத்திய கூட்டு கடிதத்தின் ஒற்றுமை தன்மை, எங்களை வலுப்படுத்தும் என்பதால், அந்த ஒற்றுமையை காக்கவும், தமிழீழ சுதந்திரத்திற்காக இயங்கும் அனைத்து அமைப்புகளும் தேவையான போது ஒன்றிணைந்து செயல்படவும் வேண்டும்.

• • •

**யாழ். மண்டைதீவு ... தொடர்ச்சி ...**

போது, ஊர்காவற்துறை காவல்துறையினரால் அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான வசதிகள் இல்லை என்று சுட்டிக் காட்டப் பட்டது. இதனை யடுத்து இவ் வழக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மண்டைதீவு மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

காவல்துறையினர் கால அவகாசம் கோரியமையால் வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 12ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**தமிழ் மக்களின் ... தொடர்ச்சி ...**

நாங்கள் சேவையாற்றுவோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்துக்குள் வடக்கு மாகாணத்துக்கு பலமுறை விஜயம் செய்துள்ளார்.தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு தான் நாங்கள் செயற்படுகிறோம் என்றார்.

# விடுதலைப் போராட்டத்தை எப்படி முன்னெடுப்பது?



"உன்னை நீ கைவிட்டு விட்டால் உன்னைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது" என்று ஒரு பிரெஞ்சு பழமொழியுண்டு". உன்னை நோக்கி பிறரைத் திரும்பிப் பார்க்கச் செய்ய வேண்டு மேயாயினும் கூட நீ சத்தமிட வேண்டும். ஒரு பச்சைக் குழந்தைகூட தன்னருகே யாரும் துணை இல்லையேல் என்றால் அழுது, கத்தி யாரையும் தன்பால் ஈர்த்துவிடும்.

இனப்படுகொலைக்குள்ளான ஈழத் தமிழர்கள் கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாய் போராடாதிருக்கும் நிலையில் உரியவனும் பாரான்; அடுத்தவனும் பாரான்; அண்டை நாடும் பாராது ; வெளிநாடுகளும் பாராது. உனக்கு யாரும் கை கொடுக்க வேண்டுமாயின் நீ கை தூக்க வேண்டும். ஆதலாற் களத்தில் போராடுவதன் மூலம் மட்டுமே உள்ளும், புறமும் கவனத்தை ஈர்த்துப் போர் கொடியைச் சர்வதேசத் தளத்தில் நிறுத்த முடியும்.



"Only the fittest will survive ' அதாவது "தக்கன மட்டுமே உயிர் வாழும்" அதாவது இங்கு காணப்படும் சூழல் என்பது ஒன்று. அந்தச் சூழலையும், தன்னையும் இணைத்துத் தனக்குப் பொருத்தமாகக் கையாள தெரிந்தவைத்தான் உயிர் வாழும் என்பதே இதன் முழுமுதற் பொருள்.

இந்த உயிரியல் டார்வினிசத்தைச் சமூக அல்லது அரசியல் டார்வினிசமாகக் கையாளும் போது அதை அதிகம் தலைமைத்துவப் பண்புடன் கூடிய வகையிற் கையாள வேண்டும். அதாவது உயிரியல் டார்வினிசத்தில் அந்த உயிருக்குச் சுயநல உயிரியல் மரபணு ( selfish gene ) இயல்பாக இயற்கைத் தேர்வின் படி தத்துவத்தை வழங்குகிறது.

மனிதனும் உயிர் என்ற வகையிற் சுயநல மரபணுவைக் கொண்டவனேயானாலும் ஒரு சமூகமாகும் போது அங்கு மேலதிகமாகத் தலைமைத்துவ ஆளுமை தேவைப்படுகிறது. இந்த வகையில் உயிரியல் டார்வினிசத்திலிருந்து சமூக வியல் டார்வினிசம் குறிப்பிடக்கூடிய அளவுக்குத் தெளிவான ஆளுமைப் பரிமாண வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

சமூகப் பரிமாணத்தைக் கட்டமைப்புச் செய்து முன்னெடுக்கும் விதத்தில் தவறுகள் இழைக்கப்பட்டால் அந்தச் சமூகம் தக்க தேர்வுவின்றித் தேய்ந்து போய் அல்லது அழிந்து போய்விடும். அதாவது உயிரிகளில் காணப் படும் வரையறுக்கப்பட்ட உயிர்களின் தலைமைத்து வத்திற்கப்பால் மனிதச் சமூகத்தில் நுண்ணறிவும், முன்னறிவும் கொண்ட அளவாற் பெரிய ஓரினம் ( சிங்கள இனம்) அளவாற் சிறிய இனங்களின் மீது அதிகதலைமைத்துவ ஆதிக்கத்தைச்செலுத்துவதன் மூலம் சிறிய இனங்களின் தெரிவு சுருங்கும், பாதிப்புக்குள்ளாகும். சீரழிவுக்குள்ளாகும். இந்த வகையில் ஈழத்தமிழர்கள்அதிகம்தலைமைத்துவப் பண்புடனும், முனைப்புடனும் செயல்பட்டால் மட்டுமே காணப்படும் சமூக சூழல் யதார்த்தத்தில் தம்மைத் தக்க வைக்க முடியும்.

மனிதனும் ஏனைய பிராணிகள் போல ஓர் உயிர் என்பதால் உயிரியல் டார்வினிசத்திலுள்ள பொதுத்தன்மைகள் மனிதனுக்கும் உண்டேயானாலும், உயிரினங்களில் அதிக நுண்ணறிவு கொண்டு மனிதன் சமூகமாகத் தன்னைக் கட்டமைப்பதில் வேறுபட்ட ஆளுமை அளவுகளைப் பிரயோகிக்க முடிகிறது.

அரசுள்ள அளவாற் பெரிய சிங்கள சமூகத்தோடு அரசற்ற அளவாற் சிறிய தமிழ்ச் சமூகம் தலைமைத்துவ ஆளுமையில் தக்க முனைப்பைக் காட்டத் தவறினால் அந்தச் சமூகம் தன் வாழ் நிலையை இழந்துபோக நேரும்.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தம்மை தமிழர் என்ற உட்சமூக ரீதியாகவும், இலங்கை என்ற உள்நாட்டு ரீதியாகவும், அண்டை நாடு, வெளிநாடுகள், சர்வதேச சமூகம் , உலகளாவிய அரசியல் நிலை போன்ற காணப்படும் அனைத்துப் புறநிலை யதார்த்தத்திற்கும் பொருத்தமாக தமக்கான தலைமைத்துவத்தை முன்னெடுக்க வேண்டும்.

அந்தவகையில் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலான அரசியற் சூழலில் ஈழத்தமிழர் நிலையானது கூழ்முட்டை (Rotten egg) நிலையையே கொண்டுள்ளது. மேற்படி நடப்புநிலை உள்ளூர், உள்நாட்டு, வெளிநாட்டு, உலகளாவிய யதார்த்தத்தை உள்வாங்கி இப்போது ஒரு புதிய வகையில் தமிழ்த் தலைமைத்துவத்தை முன்னெடுக்க வேண்டுமென்று இக்கட்டுரை வேண்டி நிற்கின்றது.

மு. திருநாவுக்கரசு

ஏறக்குறைய 1970 களின் பிற்பகுதியளவில் ஒற்றை உள்ளூர்த் துப்பாக்கியுடன் ஆரம்பமான ஆயுதப் போராட்டம் தரைப்படை ,கடற்படை, பீரங்கிப்படை, விமானப்படை , சர்வதேச சரக்கு கப்பல் அணியென வளர்ந்த நிலையில் கோட்டை கொத்தளங்களெல்லாம் அழிந்தவாறு குண்டூசிகூட இல்லாத நிலையை ஆயுதப் போராட்டம் அடைந்துள்ளது.



ஆனால்1979ஆண்டு10ஆயிரத்துக்குட்பட்ட படையினருடன் ஒரு பிரிகேடியரைத் தலைமைத் தளபதியாகக் கொண்டிருந்த இலங்கை ராணுவம் இன்று அதிநவீன ஆயுதங்களுடன் கூடிய வகையில் 3 லட்சத்து 46 ஆயிரம் படையினருடன் காணப்படுகிறது.

நாடாளுமன்ற அரசியலில் 21 உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இன்று சிதைந்து, சுக்குநூறாகி தமிழரசுக் கட்சி எட்டு உறுப்பினர்களையும், சனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு உறுப்பினரையும் , இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு உறுப்பினரையும் பாதிக்குமேல்ச்சுருங்கி கிடக்கிறது. மேலும் சனநாயகப் பண்பற்றுச் சீரழிந்து சின்னாபின்னமாகி கிடக்கிறது.

2001 ஆம் ஆண்டு அமெரிக்க இரட்டைக் கோபுரத்தின் மீதான தாக்குதல் உலகெங்கும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் முது கெலும்பை உடைக்க வழிவகுத்த போதிலும்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

### விடுதலைப் போராட் .. தொடர்ச்சி ...

அதுவே உலகெங்கும் மக்கள் போராட்ட அலைகள் எழும்புவதற்கு ஏதுவாகவும் அமைந்தது.

எனவே மக்கள் போராட்ட அலையெனும் ஓராயுதம் உலகரங்கில் முதன்மை பெறத் தொடங்கியது. பறிக்கப்பட்ட வெடிகுண்டு, துப்பாக்கி ஆயுதத்துக்குப் பதிலாக மக்கள் திரளெனும் ஓராயுதம் மக்கள் சனநாயகக் கிளர்ச்சியாய் வடிவம் பெற்றது .

முள்ளிவாய்க்காலில் இராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்ததோடு முடிந்து போகவில்லை. அங்கு அரச இராணுவம் தனது இராணுவச் சூளையில் இனப்படுகொலையென்னும் மிகக் கூரியதோர் ஆயுதத்தை உற்பத்தி

செய்தது. எனவே முள்ளிவாய்க்காலில் பறிபோன துப்பாக்கி-வெடிகுண்டு ஆயுதங்களுக்குப் பதிலாக மக்கள் காட்டுமிராண்டித் தனமாக கொல்லப்பட்டதன் வாயிலாக இனப்படுகொலையென்னும் ஆயுதம் தமிழ் மக்கள் கைக்குக் கிடைத்தது. இந்த வகையில் இனப்படுகொலை என்ற ஆயுதத்தை முதலீடாகக் கொண்டு தமிழ்மக்கள் தமது அரசியற் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்று 2016 ஆம் ஆண்டு இக்கட்டுரையாசிரியரால் எழுதப்பட்ட “ டொனமூர் முதல் சிறிசேன வரையான உத்தேச அரசியல் யாப்பு” என்ற நூலில் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. அந்நூல் வெளியிட்டு விழாவில் தமிழரசு, தமிழ்க் கொங்கிரஸ் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் உட்பட பல்வேறு அரசியற் தலைவர்களும், பல்கலைக்கழக அறிஞர்களும், ஊடகவியலாளர்களும், உரையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது ஈழத்தமிழர்களின் குறைந்தபட்ச உரிமைக்கான போராட்டங்களைக் கூட இந்த இடத்திலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. முதலாவதாக இலங்கையில் நடைமுறையிலுள்ள நாடாளுமன்ற மரபு அரசியற் பாதை இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதை வளர்க்கவே உதவியுள்ளது என்பதை 1833 அண்டு நடைமுறைக்குவந்த கோல்புறுக் யாப்பு நடைமுறையிலிருந்து இன்றைய (2025) ஆட்சியாளர்களின் யாப்பு நடைமுறை வரை வெள்ளிடை மலையெனத் தெரிகிறது.

தமிழ்த் தலைவர்கள் குறிப்பாக சோல்பரி அரசியல் யாப்பை ஒட்டிய காலத்தில் 14 மணி நேரம் மூச்சு விடாமற் பேசியும் பயனில்லை. தற்போது நாடாளுமன்றத்தில் திரைப்படப் பாணியில் 14 நிமிடங்கள் அங்கிங்குமாய் காலை, கையை உயர்த்தி, முதுகை வளைத்து, கண்ணை உருட்டி சொண்டைப் பிதுக்கிப் பேசியும் எந்த பயனுமில்லை.

நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தமக்கான மக்கள் ஆதரவை உள்ளும், புறமும் நிரூபிப்பது சரி. நாடாளுமன்றத்தில் பேச்சுப்போட்டி நடத்தி எதனையும் சாதிக்க முடியாது. மாறாக நாடாளுமன்றத்தை உள்ளும், புறமும் போர்க்களமாக மாற்றவல்ல திட்டங்களையும், வியூகங்களையும் வகுத்து அதற்கூடாக போராட்டத்தை நாடாளுமன்றத்துக்குள்ளும், புறமும், உலக அரங்கிலும் எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கான வியூகங்கள் வகுக்கப் பல வழிகளுண்டு. இதற்கான வியூகங்களைப் பின் பொருனிக் கட்டுரையில் ஆராய்வோம். இப்போது போராட்டத்துக்கான முதற் திட்டத்தை வரையறை செய்வோம். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளும், புறமும் தடை செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை, இந்தியா தவிர மேலும் 31 நாடுகளில் அந்த தடைபட்டியல் நீண்டுள்ளது. ஆயுதப் போராட்டம் என்ற பேச்சுக்கே உள்ளும், புறமும் இடமில்லை. ஆனால் இனப் படுகொலைக்கெதிரான குரலை மனிதநேயத்தினடிப்படையில் உலகெங்கும் முன்னெடுக்க முடியும்.

அதனைத் தமிழகத்திலும் முன்னெடுக்கலாம், முழு இந்தியாவிலும் முன்னெடுக்கலாம், அமெரிக்காவிலும் முன்னெடுக்கலாம், ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் முன்னெடுக்கலாம், உலகின் ஏனைய நாடுகளிலும் முன்னெடுக்கலாம். அது எதிரிக்கும், தமிழர் உரிமைகளை எதிர்க்கவல்ல வேறு சக்திகளுக்கும் எதிரான ஒரு பலம் வாய்ந்த ஆயுதம்.

செம்மணி புதைகுழியும் இதற்கு அரணமைக்கிறது. குறிப்பாக 1958 ஆம் ஆண்டிலிருந்து கறுப்பு யூலை வரையும் அதன் பின்பும் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான அனைத்து மனிதப் படுகொலைகளும் தொடர்பான நீதி நிர்வாக நடவடிக்கைகளும் இவற்றுக்கு அணிசேர்க்கின்றன.

முதலாவதாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை, இசைப்பிரியா மீதான பாலியல் வன்முறை, படுகொலை, சிறுவன் பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை என்பனவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி அதற்கான போராட்டத்தை உள்நாட்டு அரங்கிலும், தமிழகத்திலும், இந்தியாவிலும், உலக அரங்கிலும் முன்னெடுக்க வேண்டும்.இதற்கு வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் தளமாகக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தமிழ்ச் சமூகம் ஒன்று திரண்டு நடைபெற்ற அநீதிகளுக்கு நீதி கோரிப் போராடுவதற்கான ஒரு பொதுச் ஒரு செயற்குழுவை உருவாக்க வேண்டும். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கு வகிக்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் பங்கு வகிக்கலாம். சிவில் சமூக உறுப்பினர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், ஓய்வு பெற்ற அதிகாரிகள், மூத்த குடிமக்கள் உள்ளடக்கிய 30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழுவை உருவாக்கி பிரச்சனை கையாளுவதற்கு அதற்கு அனைத்து அதிகாரங்களையும் தமிழ் மக்கள் வழங்க வேண்டும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதுவே தமிழ் மக்களால் உள்ளும், புறமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும். அதுவே எம் மத்தியில் ஏற்பட்டுள்ள உள்உடைவுகளைச் சரி செய்வும் புதிய செயல்பூர்வமான ஒரு பாதையை வடிவமைக்கவும் வழி கோலும்.

“ An idle mind is the devil’s workshop” “வெறும் மனம் பிசாசின் பட்டறை” என்பதற்கிணங்க போராடாது தேங்கி வரண்டு கிடக்கும் ஒரு சமூகத்தின் மனதில் பிசாசுகள் குடிகொண்டு அதனை தங்கள் பட்டறையாக மாற்றிவிடும். இப்போது தமிழினத்தின் அரசியலும் அப்படித் தான் உள்ளது.

எனவே இனப்படுகொலை என்ற ஆயுதத்தைக் கையிலேந்தி அதற்காகப் போராட வல்ல ஒரு அமைப்பைச் சனநாயக பூர்வமாக வடிவமைத்து வெற்றிடங்களில் நிரப்பிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். சர்வதேச நாடுகளும் தமிழரின் தலையில் கொண்டையும் கட்டி, கொண்டையிற் பூவும் கட்டி , அதற்கப்பால் தலையில் குருவி கூடும் கட்டி செல்லும்.

உலகெங்கும் சிதறி வாழும் ஈழத் தமிழர்களே! ஈழத்தமிழ் மண் இந்து மாகடலின் மையத்தில் இந்தியாவின் வாசற்படியாக இருக்க வல்ல அதன் கேந்திர அமை விடத்தின் நிமித்தம் அது உலகப் பெரும் வல்லரசுகளை யெல்லாம் ஈர்க்கவல்ல புள்ளியிலுள்ளது. சர்வதேச கவனத்தை ஈர்க்கக்கூடிய புள்ளியிலுள்ளதால் அதனை ஒரு முதலீடாக் கொண்டு அறிவாற்றலுடனும், தமிழ் தலைவர்கள் செயல் பட வேண்டும்.

• • •

### காசாவில் இஸ்ரேல் ... தொடர்ச்சி ...

நடவடிக்கைகளை விதித்தல் ஆகியவை அடங்கும்.

“காசாவில் இனப்படுகொலைக்கு இஸ்ரேல் பொறுப்பு என்று ஆணையம் கண்டறிந்துள்ளது” என்று ஐ.நா. அமைப்பின் தலைவர் நவி பிள்ளை ஜெனீவாவில் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

“இனப்படுகொலை மாநாட்டின் அளவுகோல்களை பூர்த்தி செய்யும் செயல்கள் மூலம் காசாவில் பாலஸ்தீனியர்களை அழிக்கும் நோக்கம் உள்ளது என்பது தெளிவாகிறது.” “இந்த அட்டூழிய குற்றங்களுக்கு” “உயர் மட்டத்தில் உள்ள இஸ்ரே லி ய அதிகாரிகளை” பிள்ளை குற்றம் சாட்டினார், அவர்கள் “காசாவில் பாலஸ்தீன குழுவை அழிக்கும் குறிப்பிட்ட நோக்கத்துடன் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக ஒரு இனப்படுகொலை நடைவடிக்கையை திட்டமிட்டுள்ளனர்”. இனப்படுகொலைச் செயல்களில் ஈடுபட்டவர்களை விசாரிக்கவோ அல்லது வழக்குத் தொடரவோ இஸ்ரேலிய அதிகாரிகள் தவறிவிட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனியர்கள் மீது பட்டினி மற்றும் மனிதாபிமானமற்ற வாழ்க்கை நிலைமைகளை சுமத்துதல் உட்பட காசாவில் இஸ்ரேலிய நடவடிக்கைகளை ஆய்வு செய்ததாக ஆணையம் கூறியுள்ளது, பாலஸ்தீனியர்களுக்கு எதிரான பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையுடன் சுகாதாரம் மற்றும் கல்வியின் அழிவையையும் அது மேற்கோள்காட்டியது.

காசாவில் இனப்படுகொலையை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலை ஆணையம் வலியுறுத்தியது மற்றும் ஆயுத பரிமாற்றங்களை நிறுத்தி இனப்படுகொலைக்கு உடந்தையாக இருக்கும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் மீது வழக்குத் தொடர ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது.

### செயற்கைகோள் ... தொடர்ச்சி ...

டிசம்பர் 2025 இல் திட்டமிடப்பட்டுள்ளன, சுற்றுப்பாதையில் உள்ள பல சோதனை வாகனங்கள் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டுள்ளன, மேலும் உற்பத்தி வாகனங்கள் அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளன, நாங்கள் இந்த திசையில் விரைவான வேகத்தில் நகர்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்குள் செயற்கைக்கோள் கூட்டம் முழுமையாக நிலைநிறுத்தப்படும் நெட்வொர்க் ஸ்டார்லிங்கிற்கு இணையாக இருக்கும் என்று கூறினார்.

தேசிய செயற்கைக்கோள் இணைய அமைப்பின் வளர்ச்சி ரஷ்யப் படைகள் அதிக துல்லியத்துடன் ட்ரோன்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்கும் என்று ரோஸ்கோஸ்மோஸ் தலைவர் முன்பு தெரிவித்திருந்தார்.

உலகின் மிகப்பெரிய செயற்கைக்கோள் வலையமைப்பை ஸ்பேஸ்எக்ஸ் இயக்குகிறது, இதில் 7,000 க்கும் மேற்பட்ட ஸ்டார்லிங்க் விண்கலங்கள் சுற்றுப்பாதையில் உள்ளன. இந்த சேவை 2020 இல் ஆரம்பிக்கப்பட்டது, மேலும் நிறுவனத்தின் கூற்றுப்படி, 140 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களில் 6 மில்லியனுக்கும் அதிகமான பயனர்களாக அது வளர்ந்துள்ளது.

2022 முதல் உக்ரைன் 50,000 க்கும் மேற்பட்ட ஸ்டார்லிங்க் முனையங்களைப் பெற்றுள்ளது என்று கியேவ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மஸ்க் 2022 செப்டம்பரில் உக்ரைனின் எதிர்தாக்குதலின் போது ஸ்டார்லிங்க் கவரேஜை நிறுத்த உத்தரவிட்டதாகவும், கெர்சன் பிராந்தியம் மற்றும் டோனெட்ஸ்க் மக்கள் குடியரசின் சில பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் சேவையை துண்டித்ததாகவும் ஜூலையில், ராய்ட்டர்ஸ் தெரிவித்திருந்தது.

உக்ரேனிய ஊடுருவல் ரஷ்ய அணுசக்தி பதிலடியைத் தூண்டக்கூடும் என்ற மஸ்க்கின் கவலையிலிருந்து இந்த உத்தரவு வந்திருக்கலாம் என்று வட்டாரங்கள் தெரிவித்தன. மாஸ்கோவில் உள்ள அதிகாரிகள் நீண்ட காலமாக இந்த தொழில்நுட்பத்தின் இராணுவ பயன்பாடு குறித்து கவலை தெரிவித்து வருகின்றனர்.



# காணியுரிமை இல்லாத வீடமைப்பு

மருதன் ராம்

காடுகளை தோட்டங்களாக மாற்றி இலங்கையின் பொருளாதாரத்துக்கு வலுச்சேர்த்த பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் போது சம்பளம் மாத்திரமின்றி அந்த மக்களுக்கான வீடமைப்பும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்புதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக அறிவிக்கின்ற போதிலும் அவ்வாறான எவ்வித செயற்பாடுகளும் இடம்பெறுவதில்லை.



மாறாக இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் வீடுகளை வைத்து பல அரசியல்கள் இடம்பெறுகின்றன. தேசிய மட்டத்தில் மாத்திரமின்றி தோட்டங்களிலும் அரசியல் கட்சி சார்ந்து வீடமைப்பு திட்டங்கள் பகிரப்படும் சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளன. இந்தநிலையில் இவ்வருட இறுதிக்குள் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு 4350 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படுமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்திருந்தது. இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ள 10 ஆயிரம் வீடுகளில் முதல் கட்டமாக 1300 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் 2025ஆம் ஆண்டு இறுதிக்குள் 4,350 வீடுகளையும், 2026 ஆம் ஆண்டில் மேலும் 4,350 வீடுகளும் நிர்மாணிக்கப்படுமென அந்த அமைச்சு உறுதியளித்திருந்தது. இருந்தபோதும் இதுவரையில் அவற்றுக்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்பது புலனாகிறது.

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணியில் தனி வீடுகளை அமைப்பதற்கு போதுமான காணிகள் பெருந்தோட்டங்களில் இல்லையென தொடர்ச்சியாக அரசாங்கம் கருத்து தெரிவித்து வருகின்றது. குறிப்பாக உரிய வசதிகளுடன் கூடிய காணிகள் தோட்ட கம்பனிகளால் ஒதுக்கப்படுவதில்லை என்று தொடர்ச்சியான குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அரசாங்கத்தால் தற்போது முன்னெடுக்கப்படும் 10 ஆயிரம் இந்திய வீடுகளில் முதலாம் கட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட 1300 வீடுகளுக்கான ஒப்பந்தம் இரு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு நிர்மாணிக்கப்படும் வீடுகளில் ஒரு வீட்டுக்கான மொத்த செலவாக 2.8 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 282 வீடுகளையும் தேசிய வீடமைப்பு அதிகார சபை 1018 வீடுகளை நிர்மாணிக்குமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை தேசிய வீடமைப்பு அதிகார சபை நிராகரித்துள்ளமையும் மேலதிகமாக வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிலங்கள் அடையாளம் காணப்பட்டு விடுவிக்கப்படாமையும் இந்த வீட்டுத்திட்டத்தை நிர்மாணிப்பதில் தொடர் இழுபறி நிலையை ஏற்படுத்தியுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இதேவேளை, 10 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டமை தொடர்பிலும் சர்ச்சைகள் எழுந்தன. இதன் பின்னணியில் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள 4350 வீடுகளுக்கான காணிகளே இன்னும் ஒதுக்கப்படாத நிலையில் வீட்டுத்திட்டம் பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளனர்.



முதல் கட்டமாக நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட 1300 வீடுகளுக்கு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனாலும் கூட பெரும்பாலான தோட்டங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகள் இதுவரையிலும் ஒதுக்கப்படவில்லை. 2018ஆம் ஆண்டு 10 ஆயிரம் இந்திய வீடு களை அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டாலும் அதன் பின்னர் பதவி யேற்ற அரசாங்கங்கள் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கவில்லை. இந்திய அரசாங்கத்தினால் 14,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. முதலாம் கட்டமாக 4000 வீடுகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் இரண்டாம் கட்டமாக 10 ஆயிரம் வீடுகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.



முதற்கட்டமாக நிர்மாணிக்கப்படவிருந்த 1300 வீடுகளில் நுவரெலியா மாவட்டத்தில் 390 வீடுகளும் கண்டி மாவட்டத்தில் 232 வீடுகளும் கேகாலை மாவட்டத்தில் 25 வீடுகளும் குருநாகல் மாவட்டத்தில் 25 வீடுகளும் இரத்தினபுரி மாவட்டத்தில் 50 வீடுகளும் காலி மாவட்டத்தில் 30 வீடுகளும் களுத்துறை மாவட்டத்தில் 25 வீடுகளும் பதுளை மாவட்டத்தில் 208 வீடுகளும் மொனராகலை மாவட்டத்தில் 25 வீடுகளும் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த பணிகளும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. பல வாக்குறுதிகளுடன் ஆட்சி அமைத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இதுவரை தனி வீட்டுத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான காணி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவில்லை. இதனால் தொடர்ச்சியாக காணியுரிமை மறுக்கப்படுவதுடன் பயனாளிகள்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்



# “உலகில் எங்களுக்கு வேறு நண்பர்களும் உள்ளனர்”

வேல்ஸில் இருந்து **அருஸ்**

கடந்த புதன்கிழமை(17) பாகிஸ்தான் அதிபர் ஷெரீப்பின் விமானம் சவுதி வான்வெளியில் ராயல் சவுதி விமானப்படையின் F-15 களின் பாதுகாப்புடன் பிரவேசித்தபோது உலகின் பூகோள அரசியலின் அடுத்த மாற்றத்திற்கான வலுவான அறிகுறியை உலகம் உணர்ந்து கொண்டது. இவ்வாறான பாதுகாப்பும், மரியாதையும் முன்னர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ரஸ்ய அதிபர் விளாடிமிர் புடின் போன்ற தலைவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டதுண்டு. ரியாத்தின் தெருக்களை அலங்கரித்த பாகிஸ்தான் கொடிகள் மற்றும் இஸ்லாமாபாத் முழுவதும் சவுதி கொடிகள் பறந்ததன் மூலம் அந்த தருணத்தின் மகத்துவம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த செய்தி பரவியதும், இரு நாடுகளிலும் உள்ள சமூக ஊடகங்கள் பெருமையுடனும் கொண்டாட்டத்துடனும் ஒளிர்ந்தன, இது இரு தரப்பு உறவுகளில் ஒரு மைல்கல்லைக் காணும் பகிரப்பட்ட உணர்வைப் அது பிரதிபலித்தது.



சவூதி அரேபியாவும் பாகிஸ்தானும் புதன்கிழமை ஒரு மூலோபாய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன, இது அவர்களின் பல தசாப்தகால பாதுகாப்பு கூட்டாண்மையை வலுப்படுத்துகிறது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு என்பது "இரு நாடுகளும் தங்கள் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், பிராந்தியத்திலும் உலகிலும் பாதுகாப்பு மற்றும் அமைதியை அடைவதற்கும் இணைந்த உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் இந்த ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் அம்சங்களை மேம்படுத்துவதையும், எந்தவொரு ஆக்கிரமிப்புக்கும் எதிராக கூட்டுத் தடுப்பை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது" என்று பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அதாவது இந்த இரண்டு நாடுகளில் எந்தவொரு நாட்டிற்கும் எதிரான எந்தவொரு ஆக்கிரமிப்பும் இரு நாடுகளுக்கும் எதிரான ஆக்கிரமிப்பாகக் கருதப்படும் என்று ஒப்பந்தம் கூறுகிறது.




சவுதி அரேபியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிணைப்பின் அடித்தளம் பாகிஸ்தான் உருவாக்கப்படுவதற்கு முன்பே உள்ளது, அப்போது சவுதி அரச குடும்பம் தெற்காசியாவில் முஸ்லிம் லீக்கின் போராட்டத்திற்கு ஆரம்பகால ஆதரவை வழங்கியிருந்தது. 1947 இல் பாகிஸ்தானின் சுதந்திரத்திற்குப் பிறகு, புதிய அரசை அங்கீகரித்த முதல் நாடுகளில் ரியாத் ஒன்றாகும், இது பாகிஸ்தானுடன் தோளோடு தோள் நிற்கும் அதன் நட்பைக் குறிக்கிறது. 1971 ஆம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட நெருக்கடியின் போது, பாகிஸ்தானின் சிதைவை முஸ்லிம் உலகிற்கு ஒரு அடியாகக் சவுதி தலைவர்கள் பார்த்தனர்.

பாகிஸ்தான் கூறும்வரையில் வங்காளதேசத்தை ரியாத் அங்கீகரிக்கவில்லை. 1972 மற்றும் 1973 ஹஜ் பெருவிழாக்களின் போது கூட, சவுதி அதிகாரிகள் பாகிஸ்தானின் ஒப்புதலின் பின்னரே வங்காளதேச மக்கள் விழாக்களுக்கு வருவதற்கு அனுமதித்தனர்.

பாகிஸ்தானுக்கும் சவுதி அரேபியாவுக்குமான படைத்துறை உறவுகள் நீண்டவை. வளைகுடா போர்களின் போது கூட சவுதி அரேபியாவின் முக்கிய தளங்கள் மற்றும் எல்லைகளை பாதுகாப்பதற்காக பாகிஸ்தான் 20,000 படையினரை அனுப்பியிருந்தது. சவுதி படையினருக்கான பயிற்சிகளையும் அது வழங்கி வருகின்றது. தற்போதும் பாகிஸ்தானின் ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் சவுதி படையினரின் ஆலோசகர்களாக பணியாற்றி வருகின்றனர்.

இருந்தபோதும் அமெரிக்காவின் தளங்கள் வளைகுடாவில் உள்ள சவுதி உட்பட பல நாடுகளுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை இது வரையில் வழங்கி வந்திருந்தன. ஆனால் கடந்த 9 ஆம் நாள் இடம்பெற்ற கத்தார் மீதான இஸ்ரேலின் தாக்குதல் வளைகுடா முடியாட்சிகளை உலுக்கியதால், தற்போது ஏற்படுத்தப்பட்ட இந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தின் நேரம் முக்கியமானது, வளைகுடா நாடுகள் முக்கிய அமெரிக்க தளங்களை வைத்திருந்தாலும், வாஷிங்டன் இஸ்ரேலைக் கட்டுப்படுத்த விரும்பாதது அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்களின் நம்பகத்தன்மை குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.





அதாவது தங்கள் சொந்த பிராந்திய பாதுகாப்பு வலையமைப்புகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை கட்டார் மீதான தாக்குதல் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது. சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் தோஹா மீதான சமீபத்திய தாக்குதலை "அரபு, இஸ்லாமிய உலகம் மீதான மிருகத்தனமான ஆக்கிரமிப்பு" செயல் என்று கண்டனம் செய்திருந்தார்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, இந்த ஒப்பந்தம் இந்தியா மற்றும் சவுதி அரேபியாவுடனான அதன் உறவுகளை சமநிலைப்படுத்துவதில் புதிய சவால்களைச் ஏற்படுத்தியுள்ளது. காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் மற்றும் ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளை பாகிஸ்தான் வெளிப்படையாக விமர்சிக்கும் போது தற்போது சவுதி அதனுடன் இணைந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் "ஆபத்தான காலங்களில்"

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# இஸ்ரேல், டோஹாவில் தாக்குதலை முன்னெடுத்திருக்கும் பின்புலத்தில், நடுவராகப் பணிபுரிய ரஷ்யா முன்வருமா?

**பகுதி 2 (இறுதிப்பகுதி)**

தமிழில்: **ஜெயந்திரன்**

**rt:டோஹாவில் தாக்குதலை மேற்கொள்ள இஸ்ரேலுக்கு ட்ரம்ப் அனுமதி வழங்கியதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறானதொரு பின்புலத்தில் இந்தப் பிரச்சினையில் வோஷிங்டனின் பங்கு எவ்வளவு ஆழமானது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

**கிறிகொறி லூக்கியானோவ்**

தற்போதைய அமெரிக்க அதிபரை உளவியல் ரீதியாக நெத்தன்யாகு நன்கு புரிந்துவைத்திருக்கிறார். அமெரிக்க அதிபர் முகத்துதியை அதிகமாக விரும்பும் ஒருவர். பூகோள ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும், அரசியல் தளத்தில் அவர் எவ்வளவு முக்கியமானவராக இருக்கிறார் என்பதனை மற்றவர்கள் பேச வேண்டும் என்று விரும்பும் ஒருவர். இஸ்ரேலின் அரசியல் தலைமைத்துவம் இவ்விடயத்தை நன்கு புரிந்து வைத்திருக்கிறது. புலனாய்வு ரீதியாக கூட்டுச் செயற்பாடுகள் இருந்திருக்கலாம் அல்லது இல்லாதிருந்திருக்கலாம் அல்லது தாக்குதல் வெற்றி அளித்திருக்கலாம் அல்லது தோல்வியில் முடிவுற்றிருக் கலாம். ஆனால் எப்படி இருந்தாலும், அவரது முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்ட அவருக்கு இதில் பங்கு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கலாம்.



ஒருவேளை தாக்குதல் வெற்றியளித்திருந்தால், எங்களுக்கு அதுபற்றி இன்னும் தெரியாது - எவருமே கொல்லப்படவில்லை என்றும் காயப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தாலும் - ஹமாசின் கட்டமைப்புகளைப் பொறுத்தவரையிலும் மற்றும் அரசியல் இராணுவ ரீதியாகவும், அது அவர்களுக்கு ஒரு பலத்த அடியாகவே இருந்திருக்கும். அமெரிக்கா, இஸ்ரேல் இரண்டுமே ஹமாஸ் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாகச் சித்தரிப்பதால், அங்கு வெற்றியீட்டப்பட்டிருந்தால், அமெரிக்காவிலும் பூகோள அரங்கிலும் பன்னாட்டுப் பயங்கரவாதத்துக்கெதிரான போரில் ட்ரம்ப் வெற்றி அடைந்ததான ஒரு காட்சி காட்டப்பட்டிருக்கும்.



அதற்கு மாறாக, தாக்குதல் தோல்வியைத் தழுவியிருந்தால், அது தாக்குதலுக்கான பொறுப்பின் ஒரு பகுதியை இஸ்ரேலிலிருந்து அமெரிக்காவுக்கு நகர்த்தி, அமெரிக்காதனக்காகவும் இஸ்ரேலுக்காகவும் சேர்த்துக் கதைக்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கும். உண்மையில் வோஷிங்டனுக்கு எதுவுமே தெரியாது, அதற்கும் இஸ்ரேலுக்கும் எந்தவிதமான உடன்பாடும் இருக்கவில்லை என்ற வாதமும் அமெரிக்காவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாகத் தான் இருந்திருக்கும். அப்படி நடந்திருந்தால் இஸ்ரேல் தன்னிச்சையாக நடந்திருக்கிறது என்ற புரிதலை அது ஏற்படுத்தியிருக்கும்.

அமெரிக்க அரசியலைப் பொறுத்தவரையில் அதிபரின் ஆளுமை, தற்போது ஒரு முக்கிய இடத்தில் இருக்கிறதனால், அதிபர் ட்ரம்பின் ஆளுமைப் பண்புகளை இஸ்ரேல் தமக்குச் சாதகமான வகையில் பயன்படுத்தி வருகிறது.

**rt: அமெரிக்காவும் இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாகவே கருதுகிறது. அதே நேரத்தில், ஏனையோரோ காஸா மக்களின் நியாயபூர்வமான அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்களாகக் ஹமாஸ் அமைப்பைக் கருதுகின்றனர். அப்படியென்றால், அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது. இதனை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

**கிறிகொறி லூக்கியானோவ்**

அமெரிக்காவாக இருந்தாலும் சரி அல்லது இஸ்ரேலாக இருந்தாலும் சரி, இந்த இரு தரப்பினருமே தமது நோக்கங்களுக்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள் ஹமாஸ் பாலஸ்தீன மக்களை அரசியல் ரீதியாகப் பிரதிநிதித்துவப் படுத்துகிறவர்கள் என்று உண்மையை வெறும் வாய்ச்சொல்லில் அழிக்க அவர்கள் விரும்பவில்லை. அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக, இன்னும் என்னென்ன வகையில் அவர்களை அழிக்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் அழிப்பதையே இஸ்ரேலும் அமெரிக்காவும் தங்கள் இலக்காகக் கொண்டிருக்கின்றன.



அரசியல் ரீதியான நீதியான பிரதிநிதிகளாக விளங்குபவர்களுக்கு எதிராக இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதில்லை அரசியல் ரீதியாக ஒரு இனக்குழுமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாதவர்களுக்கு எதிராகவே பொதுவாக முன்னெடுக்கப்படுகின்றன. கட்டாரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை உற்று நோக்கும் போது இஸ்ரேலோ அன்றேல் அமெரிக்காவோ (அமெரிக்கா இதில் சம்பந்தப்பட்டிருந்தால்) ஹமாசுடன் அமைதிப் பேச்சு வார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாக எந்த வித ஈடுபாட்டையும் கொண்டிருக்கவில்லை. உண்மையில் இந்தத் தாக்குதலுடன் பேச்சு வார்த்தையில் நடுவராகப் பணியாற்றும் கட்டாரின் பங்கு ஒரு முடிவுக்கு வந்து விட்டது. ஹமாசுடன் இனிமேல் எந்தவித பேச்சுவார்த்தைக்கும் அவசியம் இல்லை. எதிர்காலத்தில் அவ்வாறான பேச்சு

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## உலகில் எங்களுக்கு.. . தொடர்ச்சி ...

உருவாகியுள்ளது என்று முன்னாள் அமெரிக்க இராஜதந்திரி ஜல்மே கலீல்சாத் கூறியதாக அசோசியேட்டட் பிரஸ் தெரிவித்துள்ளது. “பாகிஸ்தானிடம் இஸ்ரேல் உட்பட மத்திய கிழக்கு முழுவதும் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் உள்ளன. அமெரிக்காவில் உள்ள இலக்குகளை அடையக்கூடிய ஏவுகணைகளையும் அது உருவாக்கி வருகிறது” என்று திரு. கலீல்சாத் தெரிவித்துள்ளார்.



இந்தியாவைப் பொறுத்தவரை, இந்த ஒப்பந்தம் பாகிஸ்தானுடனான அதன் போட்டியை சிக்கலாக்குகிறது, ஏனெனில் அண்மைக்காலமாக இந்தியாவுக்கும், ரியாத்திற்கும் இடையிலான உறவுகள் வளர்ந்து வருகின்றன. இந்தியாவிற்கு எரிபொருட்களை விநியோகம் செய்யும் நாடுகளில் சவுதி மூன்றாவது இடத்தில் உள்ளது. ரஸ்யாவின் எரிபொருட்களை இந்தியா கொள்முதல் செய்யக்கூடாது என அமெரிக்கா அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் தற்போது சவுதிக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் இந்தியாவுக்கு இனிப்பான செய்தியல்ல.

ஈரானைப் பொறுத்தவரை, பிராந்திய பதற்றம் நிலவும் நேரத்தில் வலுவான இராணுவ கூட்டணிகளை உருவாக்க சவுதி அரேபியாவின் முயற்சி அதற்கு உதவலாம். அமெரிக்காவைப் பொறுத்தவரை, இந்த ஒப்பந்தம் வளைகுடா நாடுகள் வாஷிங்டனுக்கு அப்பால் பாதுகாப்பு உத்தரவாதங்களை தேட ஆரம்பித்துள்ளன என்ற கசப்பான செய்தியை சொல்லியுள்ளது. அது இஸ்ரேலுக்கும் நன்மையானது அல்ல. காசாவில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அதன் 15 உறுப்பு நாடுகளில் 14 நாடுகள் ஆதரித்தபோதும், அமெரிக்க தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் இந்த வாரம் ஆறாவது முறை தோற்கடித்துள்ள நிலையில் சவுதியின் மாற்றம் வெளிவந்துள்ளது.

பாகிஸ்தானின் இரஜதந்திர உறவுகள் அண்மைக்காலமாக வளர்ந்து வருகின்றன. ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா விலகிய பிறகு, ஜனாதிபதி ஜோ பைடனின் கீழ் வாஷிங்டனில் பாகிஸ்தானின் மூலோபாய முக்கியத்துவம் குறைந்திருந்தது. இருப்பினும், டிரம்ப் நிர்வாகத்தின் கீழ் இஸ்லாமாபாத் அமெரிக்காவுடனான உறவுகளை மீண்டும் திறந்துள்ளது, பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஆசீர் முனீருக்கு ட்றம்ப் தனது மாளிகையில் விருந்துபசாரமும் வழங்கியிருந்தார். இது மூலோபாய உறவுகளின் எச்சரிக்கையான மறுமலர்ச்சியைக் காட்டுகின்றது, அதே நேரத்தில் சீனாவுடனான அதன் நீடித்த கூட்டாண்மையையும் பாகிஸ்தான் கொண்டுள்ளது, குறிப்பாக சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் மூலம் பொருளாதார நலன்களை பராமரித்து வருகிறது. படைத்துறை உடன்பாடுகள் மூலம் பாதுகாப்பையும் பராமரித்து வருகின்றது.



மேலும், பாகிஸ்தான் துருக்கி மற்றும் அஜர்பைஜானுடன் அரசியல், பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தியுள்ளது, அதே நேரத்தில் பலதரப்பு இராஜதந்திரத்திலும் தெரிவுநிலையைப் பெற்றுள்ளது. ஜூலை 2025 இல் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள இஸ்லாமாபாத் மோதல்களை அமைதியான முறையில் தீர்ப்பதற்கான தீர்மானத்திற்கு வெற்றிகரமாக ஆதரவைத் திரட்டியது மற்றும் பிரான்ஸ் மற்றும் சவுதி அரேபியா இணைந்து தலைமை வகித்த நியூயார்க்கில் நடந்த இரு-தேசங்கள் என்ற பாலஸ்தீன - இஸ்ரேல் பிரிச்சனையின் தீர்வுக்கான ஐ.நா. உயர்மட்ட மாநாட்டில் தீவிர பங்கை அது கொண்டிருந்தது.

மேலும் படைத்துறை ரீதியாக கடந்த மே மாதம் இடம்பெற்ற இந்திய பாகிஸ்தான் போரில் நேட்டோவின் 3 ரபேல் மற்றும் ரஸ்யாவின் சுக்கோய் உட்பட 6 போர் விமானங்களை வெற்றிகரமாக சுட்டு வீழ்த்தியது என்பதும் அனைத்துலகத்தில் அதன் படைத்துறை வல்லாண்மையை உயர்த்தியிருந்தது. மொத்தமாக, இந்த முன்னேற்றங்கள் சவுதியின் பார்வையில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டை உயர்த்தியுள்ளதுடன் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அவசியத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்த உடன்பாட்டின் தாக்கங்களை இந்தியா தனது தேசிய பாதுகாப்பில் ஆய்வு செய்யும் என்று அதன் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இஸ்ரேலுடன் நெருக்கமான பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகளை இந்தியா உருவாக்கியுள்ளது, ஆனால் “புது தில்லி இஸ்ரேலுடனான தனது பாதுகாப்பு உறவை மேம்படுத்த அவசரப்படாது” என்று நெருக்கடி குழு என்ற சிந்தனைப்பள்ளியின் இந்தியாவின் மூத்த ஆய்வாளர் பிரவீன் டோந்தி தெரிவித்துள்ளார்.

அதேசமயம், இந்த உடன்பாடு இந்தியாவின் பாதுகாப்புக்கும், இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் எவ்வளவு ஆபத்தானது என்பது தொடர்பில் ஆய்வு செய்வதாக இந்தியா தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தியாவை விட அதிக அணுக்குண்டுகளை கொண்டுள்ள பாகிஸ்தானுடனான சவுதியின் உறவுகள் என்பது முஸ்லீம் நாடுகளின் எதிர்காலத்திற்கு அவசியமானது என்பது ஒருபுறம் இருக்க மேற்குலக நாடுகளாலும் இஸ்ரேலினாலும் தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்கும் அரபு நாடுகள் இந்த உன்பாட்டின் மூலம் மிக சத்தமாக ஒன்றைச் சொல்கிறார்கள், ‘உலகில் எங்களுக்கு வேறு நண்பர்களும் உள்ளனர்’

## தமிழரின் தாக ... தொடர்ச்சி ...

போராட்டம் வெற்றிபெற, தான்கொண்ட கொள்கையில் இருந்து விலகாமல் பசித்து தவம் இருந்து 12ம் நாள் 1987, செப்டம்பர் 26, சனிக்கிழமை அன்று காலை 10.48 மணிக்கு திலீபன் உயிர் பிரிந்தது.

265 மணிநேர உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தி முடித்து விடை கொடுத்துச் சென்றிருந்தான் திலீபன். திலீபன் ஆகுதியான போது ஏற்கனவே 650 மாவீரர்கள் மட்டுமே சாவைத்தழுவி இருந்தனர் தீலிபன் 651வது மாவீரராக தியாக மரணம் ஏற்பட்டது. தாயகம் முழுவதும் வடகிழக்கு எட்டு மாவட்டங்களில் சகல பிரதேசம் முழுவதும் சோகத்திலும், கோபத்திலும் ஆழ்ந்தது. திலீபனின் உடல் விடுதலைப் புலிகளின் கொடியால் போர்த்தப்பட்டு இறுதி மரியாதை செய்யப்பட்டு, அவருக்கு லெப் கேணல் பட்டம் வழங்கப்பட்டது.

அகிம்சைப் போராட்டத்திற்கே ஆணிவேராகத் திகழ்ந்த பாரதநாட்டின் அண்ணல் காந்தி அடிகள் கூட, தனது உண்ணாவிரதப் போராட்டங்களை நீராகாரம் அருந்தித்தான் நடத்தினார்.

ஐரிஷ் போராட்ட வீரன் ‘பொபி சாண்ட்ஸ்’ கூட நீராகாரம் அருந்தித்தான், சிறைக்குள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார்.

உலகத்தில் ஒரு துளி நீர் கூட அருந்தாமல் இலட்சியப்பசியுடன் “சாகும்வரை உண்ணாவிரம்” என்றால் என்ன என்பதை நிரூபித்த ஈழத்தமிழன் “தியாகி திலீபன்” மட்டுமே.

ஈழத்தமிழ் தேசிய இனம் காலத்திற்கு காலம் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ ஒடுக்குமுறைகள், இனப்படுகொலைகள் நில ஆக்கிரமிப்புக்கள் சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள், காணாமல் போனோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் மட்டுமின்றி எமது வரலாற்று ரீதியான மற்றும் ஆத்மார்த்த ரீதியான அபிலாசைகளுக்காகவும் குரல் கொடுத்து வந்துள்ளது. ஈழ தேசத்தில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் தனியான தேசிய இனத்தவர்கள். தாயகப் பிரதேசத்திற்கென்று தனியான வரலாறு, மொழிச்சிறப்பு, தனித்துவமான பண்பாட்டு விழுமிய வழக்காறுகள் என்பவற்றுடன் பொருளாதார வளங்களையும் இயல்பாகக் கொண்டிருப்பவர்கள்.

தியாகி திலீபன் உயிர்தியாகம் செய்து இன்று 2025, செப்டம்பர் 26ல் 38, ஆண்டுகள் கடந்தும் இலங்கையில் தமிழினப்இனப்படுகொலைகளும், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளும் இலங்கையை ஆட்சிசெய்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக செயல்பட்ட ஜே ஆர் ஜெயவர்தன, ஆர். பிரேமதாசா, டி.வீ.விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஷபக்ஷ, மைத்திரிபால, கோட்டபாய, ரணில் விக்கிரமசிங்கா வரிசையில் தற்போதைய சிவப்பு சட்டை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்காவரையும் தொடர்கிறது.

இனப்பிரச்சனை விடயத்திலும், இனப்படுகொலை விடயத்திலும் சகல ஜனாதிபதிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே தீலிபன் உயிர் நீத்த 1987, செப்டம்பர் 26 தொடக்கம் இன்று 2025, செப்டம்பர் 25, வரையும் 38, வருடங்களாக நாம் உணர்ந்துள்ள உண்மை.

அகிம்சைபோராட்டங்களும், ஆயுதப் போராட்டங்களும் தோல்வியில் முடிந்தாலும், அல்லது மௌனித்தாலும் எமது உரிமைக்கான போராட்ட வடிவங்கள் மௌனிக்கவில்லை தியாகி திலீபன் எந்த நோக்கத்துக்காக தன்னை வருத்தி 12, தினங்கள் பசியோடு இருந்து ஈழமண் விடிவுக்காக ஆகுதியானரோ அவர் மூட்டிய விடுதலை தீ என்பது இன்று ஈழமண்ணை தாண்டி , அயல் உறவு நாடான இந்தியாவை தாண்டி, உலகமெலாம் பரந்துவாழும் தமிழ்மக்கள் எல்லோரும் எமது தேச விடுதலைக்காக போராடிக்கொண்டே உள்ளனர்.

தேர்தல் அரசியலுக்காகவும், பதவி சலுகை அரசியலுக்காகவும் கடந்த 2009, மே,18,க்கு பின்னர் ஒருமித்து முடிவெடுக்க முடியாமல் சிதறிக் கிடக்கும் தமிழ்த்தேசிய வாதிகள் அனைவரும் சிந்திக்கவேண்டும்.

தியாகி திலீபன் எந்த நோக்கத்திற்காக உயிர் நீத்தாரோ அந்த நோக்கம் அடையும்வரை நாம் அனைவரும் ஒற்றுமையாக விடுதலை அடையும் வரை எமது விடுதலைப்பயணத்தை தொடர்வதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

*“தியாகிகள் சாகலாம்!*
*தியாகம் சாகாது”*

இஸ்ரேல், டோஹ ... தொடர்ச்சி ...

வார்த்தைகள் முன்னெடுக்கப்படமாட்டா.

ஆகவே, பாலஸ்தீனப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, காஸாப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, இவை தொடர்பாக இனிமேல் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் இருக்கமாட்டாது. ஹமாசுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் நோக்கம் எதுவும் இஸ்ரேலுக்கு இல்லை என்பது மட்டுமன்றி, கட்டாரில் அது முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, தனக்கு எந்தவிதமான நடுவர்களும் தேவை இல்லை என்பதே இஸ்ரேலின் நிலைப்பாடு என்பது தெளிவாகிறது.

ஆனால் இவ்வாறான ஒரு நிலைப்பாடு இன்னொரு கேள்வியை எழுப்புகிறது. அது மனிதநேயம் தொடர்பானதாகும். காஸாவில் வாழும் அப்பாவிப் பொதுமக்களின் நிலை எது என்பதே அந்தக் கேள்வி ஆகும். இந்த விடயம் முழு அரபுலகத்துக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உண்மையில் பேசுவதற்கு அங்கு ஹமாசைத் தவிர வேறு யாருமே இல்லை. இருப்பினும் காஸாவில் வாழும் பொதுமக்களுக்கான பொறுப்பு அரபு நாடுகளிலோ அல்லது தங்களிலே தங்கியிருக்கிறது என்ற நிலைப்பாட்டை அமெரிக்கா திணிக்க முயல்கிறது.

### பிராந்தியப் பிரச்சினை

**rt: மேற்கு ஜெரூசலம் இவ்வாறான ஒரு கொள்கையை முன்வைப்பதில் உள்ள ஆபத்து என்ன?**

**கிறிகொறி லுக்கியானோவ்**

இதனால் இஸ்ரேலுக்கு அரசியல் ரீதியாக ஏற்படக்கூடிய ஆபத்து என்னவென்றால், பணயக் கைதிகளின் எதிர்காலம் ஆகும். மனிதநேயப் பக்கத்தின் மற்றைய பக்கம் இதுவாகும். இஸ்ரேல் சமூகமோ ஒவ்வொரு இஸ்ரேலியரதும் உயிர் முக்கியம் என்றே கருதுகிறது. ஆனால் நெத்தன்யாகுவின் செயற்பாடுகளைக் கண் ணோக்கும் பொழுது, அவ்வாறு அவர் சிந்திப்பதாகத் தெரியவில்லை. நம்பத்தக்க பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த உயிர்கள் பலியாக்கப்படலாம் என்றே நெத்தன்யாகு கருதுகின்றார்.



அதுமட்டுமன்றி, ஹமாஸை முழுமையாக அழிக்கும் வரை அவ்வாறான ஒரு பாதுகாப்புக்கு இடமில்லை. பலவீனமான ஒரு பக்கத்துடன் இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க விரும்புகிறது என்று நம்புகின்ற அரபுலகத்தின் மாயைக்கு விழுகின்ற ஒரு பலத்த அடி இதுவாகும். எகிப்திய அரசியலையும் இது பாதிக்கப் போகின்றது. காரணம், இஸ்ரேலுக்கும் ஹமாசுக்கும் இடையே நடுவராக கெய்றோவும் பணியாற்றியது.

அப்படிப் பார்க்கும் போது, தனது நடவடிக்கைகளின் காரணமாக, எகிப்து போன்ற ஒரு நாட்டில் தனக்கு இருக்கும் அச்சுறுத்தலை இஸ்ரேல் அதிகரிக்கிறது. காரணம் ஹமாசுடனான பேச்சுவார்த்தைகளில் எகிப்தும் நடுவராகச் செயற்பட்டது. ஆனால் அவ்வாறான ஒரு கொள்கை இஸ்ரேலுக்கு வெற்றியைக் கொண்டுவரும் சூழல் உள்ளது.

**rt: தங்களைப் பாதுகாக்கும் நிலையில் அரபு நாடுகள் இருக்கின்றனவா?**

**கிறிகொறி லுக்கியானோவ்**

இந்தப் பிரச்சினை தொடர்பாக தங்கள் அணுகு முறையைத் தக்கவைக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. உள்ளகப் பிளவுகள், பலவீனம் மற்றும் அவர்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு இல்லாததன் காரணத்தினால், தனது கொள்கைகளை நிலைநிறுத்தக்கூடிய நிலையில் அரபு லீக் இல்லை. இருப்பினும் அவர்கள் தங்களுக்குள்ளே ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி பாலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினையைத் தீர்க்க வேறு வழிகளைக் கையாளலாம்.

எடுத்துக்காட்டாக ரஷ்யாவுக்கும் அரபுலகத்துக்கும் இடையே வருகின்ற ஒக்ரோபர் மாதம், ஒரு மாநாடு நடைபெற இருக்கிறது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் என்ற தகைமையை ரஷ்யா இப்போதும் கொண்டிருக்கின்றது. எனவே இவ்வாறான பிரச்சினைகளில் நடுவராகச் செயற்படக்கூடிய ஆற்றல் ரஷ்யாவுக்கு உண்டு. அவ்வாறான தகுதி எந்தவொரு அரபு நாட்டுக்கும் இல்லை. தங்களது பிராந்தியத்திலும் மற்றும் பூகோள ரீதியாகவும் அரபுலகத்தின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு, ரஷ்யா, சீனா, பிறிக்ஸ் அமைப்பு போன்றவை உதவிசெய்யலாம்.

**rt: இவ்வாறான ஒரு அணுகுமுறையை பன்னாட்டு உலகம்-குறிப்பாக ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் போன்றவை எவ்வாறு பார்க்கப்போகின்றன? ஒரு சில செயற்பாடுகளுக்கு பலத்த கண்டனம் முன்வைக்கப்படும் அதே வேளை, மற்றைய செயற்பாடுகள் பார்த்தும் பாராமல் விடப்படுவதற்கான காரணம் என்ன?**

**கிறிகொறி லுக்கியானோவ்**

இங்கேயுள்ள சிக்கல் என்னவென்றால், இஸ்ரேல் இவ்வாறு தான் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. இஸ்ரேலின் பாதுகாப்புக்கொள்கையின் தனித்துவம் இது தான். எதிரிகளை இல்லாதொழிப்பதே இஸ்ரேலின் அணுகுமுறை. அண்மைக்காலத்தில் இதனை இன்னும் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இந்த விடயத்துக்கு மேலதிக அரசியல் விளக்கம் தேவையில்லை. ஆனால் இஸ்ரேலின் இவ்வாறான அணுகுமுறை இப்பிராந்தியத்தை யாரும் எதிர்வுகூற முடியாத ஒரு நிலைக்குத் தள்ளியிருக்கிறது என்பதே உண்மையாகும். பத்து அல்லது இருபது வருடங்களுக்கு முன்னர் மட்டுமல்ல 50 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையே இஸ்ரேல் நிர்மூலமாக்கி வருகிறது. முதலாம் உலகப் போருக்குப் பின்னர் இந்த ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டன. இரகசிய ஒப்பந்தக்களுக்கும் கொள்கைகளுக்கும் எதிராக பன்னாட்டுப் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்த வரையில் ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டன. இந்த ஒழுங்கு விதிகளே முதலில் நாடுகளின் சபைக்கும் பின்னர் ஐக்கிய நாடுகளின் அணுகுமுறைக்கும் அடித்தளமாக அமைந்தன.

இந்த தத்துவங்கள் கூறுவது யாதெனில், அரசியல் என்பது பகிரங்கமானதாகவும், அதே நேரம் பன்னாட்டு விழுமியங்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட சில விழுமியங்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஆனால் இஸ்ரேலும், ஏன் 2020 இல் காசிம் சொலைமானியைக் கொன்ற அமெரிக்கா கூட, தமது தேசிய நலன்களைப்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## ஐ.நா.வில் புதிய .. . தொடர்ச்சி ...

கடந்த காலங்களில் இலங்கை தொடர்பில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில் அதியுச்சமாகக் காணப்பட்ட 'சர்வதேச கலப்பு நீதிமன்றம்' என்ற கோரிக்கையிலிருந்து குறிப்பிடத்தக்க பின் வாங்கலாகும். அதுமட்டுமன்றி, பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை கோரிக்கையிலிருந்தான சர்வதேசத்தின் பாரியதொரு விலகலாகும்.

போரின் பின்னரான இலங்கையின் எந்த அரசாங்கமும் சர்வதேச தலையீட்டை தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் எதிர்த்தே வந்திருக்கின்றன. இலங்கையின் இறையாண் மைக்கு உட்பட்டதொரு உள்நாட்டுப் பொறிமுறையே பொறுப்புக்கூறலுக்கு உகந்தது என்பதிலும் உறுதியாகவே இருந்துள்ளன.

இலங்கையின் இந்த நிலைப்பாட்டிற்கு சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் தாராளமான ஆதரவு இலங்கைக்கு உள்ளது. இந்த நாடுகள், உள் விவகாரங்களில் வெளிநாட்டு தலையீடுகளை எதிர்ப்பதால், சர்வதேசவிசாரணைகள்தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக நிற்கின்றன. குறித்த நாடுகளின் மேற்குல எதிர்ப்பும், இலங்கைக்கான ஆதரவும் சர்வதேச சமூகத்தை 'இராஜதந்திர நெருக்கடிக்குள்' தள்ளியிருக்கின்றன.

குறிப்பாக, இம்முறை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைத் தாண்டி, எரித்திரியா, லாவோஸ் ஆகிய நாடுகளும் பகிரங்கமாக இலங்கைக்கான ஆதரவினை வெளிப்படுத்துவதில் மும்முரமாக இருக்கின்றன.

இதனைவிடவும் தமக்கு ஆதரவாக, பஹ்ரைன், குவைத், ஓமான், கட்டார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எதியோப்பியா, ஐவரிகோஸ்ட், பிலிப்பைன்ஸ், ஜப்பான், லாவோஸ், தாய்லாந்து, வனூட்டு, தென்கொரியா, எரித்ரியா, ஈரான், நேபாளம், இந்தியா, சிம்பாப்வே, வியட்நாம், சீனா, அஜர்பைஜான், இந்தோனேசியா, துருக்கி, பெலாரஸ், எகிப்து, வெனிசுவேலா, மாலைதீவுகள், கியூபா, தென்சூடான், சூடான், ரஷ்யா மற்றும் புரூண்டி உள்ளிட்ட 33நாடுகள் இருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலைமை தோன்றியுள்ளமையால் தான் இணை அனுசரணை நாடுகள் உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், ஒரு முழுமையான சர்வதேசப் பொறிமுறையை வலியுறுத்துவதை விட, இலங்கையுடன் ஒத்துழைத்து, ஒரு உள்நாட்டுப் பொறிமுறையை நிறுவுமாறு கோருவது, நடைமுறைக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதியிருக்கிறது.

உண்மையில் ஜெனிவாவில் நடைபெற்று வரும் 60ஆவது அமர்வு இலங்கைக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் முக்கியமான தருணம். ஒவ்வொரு தரப்பும் தமது பிடிமானங்களை தக்கவைப்பதற்காக கடுமையாக உழைக்க வேண்டியதொரு நிலைமை.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கத்திலிருந்து அதற்கான போதுமான முனைப்புக்கள் முன்னெடுக்கப்படவில்லை. லொபியிங்கிலும் பாரிய பின்னடைவுகளே காணப்படுகின்றன. அரசியல் கட்சிகள், சிவில் சமூகங்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர், புலம் பெயர் அமைப்புக்கள் ஆகியவற்றுக்குள் காணப்படுகின்ற 'அக முரண்பாடுகள்' இந்த மிக மோசமான நிலைமையை தோற்றுவித்துள்ளன என்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்காக குரல் கொடுப்பதற்கு வரையறைகள் உள்ளன. 'நாடுகளுக்கும் நாடுகளுக்குமான உறவு' 'அரசுக்கும், அரசுக்குமான இருதரப்பு உறவு' போன்ற பல்வேறு காரணங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளன.

இவற்றையெல்லாம், பயன்படுத்தி, இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள், சர்வதேசத்தின் தலையீட்டை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதுடன் உள்ளகப் பொறிமுறையை சர்வதேச சமூகத்தால் ஏற்கவும் செய்துள்ளமையானது அவர்களின் வெற்றியே.

• • •

## தமிழ்த் தேசிய ... தொடர்ச்சி ...

எதிர்காலம் மற்றும் அரசியல் மாற்றத்தின் முக்கிய சக்தி என்று கம்யூனிச சித்தாந்தம் நம்புகிறது. எனவே, இளைஞர்களை மையமாகக் கொண்ட அரசியல் கூட்டங்கள், சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை நடத்துவதன் மூலம் வடக்கு இளைஞர்களை தனது பக்கம் ஈர்க்க முயற்சிக்கிறது ஜே.வி.பி.

இந்த நடவடிக்கைகள், மூலமாக எதிர்கால அரசியல் தலைமுறையொன்றை உருவாக்குவதோடு, கட்சியின் சித்தாந்தத்தை அவர்களிடம் கொண்டு செல்வதற்கானதொரு களமாகவும் அமைகின்றன. ஆகவே தான் தமிழ்த் தேசியம் ஊறித்திளைத்த வடக்கில் தலைமுறைகள் கடந்து இளையோரை நோக்கி புதிய மூலோபாயத்துடன் நகர்ந்திருக்கிறது ஜே.வி.பி.

இவ்வாறிருக்கையில் தெற்காசியாவில் புகழ்பெற்ற யாழ்.நூலகம் மெல்லமெல்ல செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற நிலையில், யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற ஜே.வி.பியின் பிராந்திய தலைமையகத்தில் நூலகம் ஒன்றை திறந்து வைத்திருக்கின்றார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

இந்த நூலகம் அமைக்கப்பட்டதன் மூலம், கட்சி, புத்தக வாசிப்பை ஊக்குவிப்பது மட்டுமின்றி, அதன் அரசியல் கொள்கைகளையும், சமூகப் பார்வைகளையும் உள்ளடக்கிய நூல்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லத் திட்டமிடுகிறது என்பது வெளிப்படையான விடயம். இது கல்வி மற்றும் அறிவைப் பயன்படுத்தி மக்களை அணிதிரட்டும் கம்யூனிச மூலோபாயத்தின் வெளிப்பாடாகும்.

பொதுவாகவே நூலகங்கள் அமைப்பது என்பது கம்யூனிச இயக்கங்களின் முக்கிய மூலோபாயமாகப் பார்க்கப்படுகிறது. கம்யூனிச சித்தாந்தத்தின்படி, மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வையும், அறிவையும் பரப்புவதற்கு நூலகங்கள் சிறந்த கருவிகளாகும்.

ஜே.வி.பி.யானது அதன் தோற்றம் முதலே மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் அடிப்படையில் இயங்கும் கட்சியாகவே இருக்கிறது. கட்சியின் நிறுவனர் ரோஹண விஜேவீர, ஆரம்பத்தில் சோசலிச சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காக அரசியல் வகுப்புகளை நடத்தினார். இந்த வகுப்புகள் படித்த கிராமப்புற இளைஞர்கள், யுவதிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

இத்தகைய பின்னணியைக் கொண்ட ஜே.வி.பி தற்போது வடக்கின் அறிவார்ந்த இளையோரை கட்சிக்குள் ஈர்ப்பதற்கும், கம்யூனிச சிந்தனைகளை அவர்களுக்குள் விதைப்பதற்கும் தனது சித்தாந்த பரவலாக்கத்தை விரிவுபடுத்துவதற்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமை அலுவலக நூலகத்தை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

ஆக, இளையோர் கழகங்களை அமைத்தல், நூலகங்களை திறத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் ஜே.வி.பி.யின் பாரம்பரிய கம்யூனிச சித்தாந்தத்தின் நவீன வெளிப்பாடுகளாகக் கருதப்படுவதோடு அது வடக்கில் திடமாகக் காலூன்றுவதற்கான நீண்டகால திட்டமிடலின் ஆரம்பகட்ட பிரதிபலிப்புக்களாகும்.

தேர்தல் காலத்தில் விளையாட்டு உபகரணங்களை இளையோர் கழகங்களுக்கு வழங்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் 'வாக்குச்சேகரிப்பு' சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்டு ஜே.வி.பி. சிந்திக்கிறது. தேர்தல் நிறைவடைந்தவுடன் உறங்கு நிலைக்கு நிலைக்குச் செல்லும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் மரபு ரீதியான பழக்கங்களுக்கு அப்பால் ஜே.வி.பி செயற்படுகின்றது.

அந்த வகையில் ரில்வினின் வடக்கு விஜயத்தை ஆழமாக நோக்கும்போது வடக்கில் புதிய அரசியல் அத்தியாயத்தை ஆரம்பிப்பதற்கான அங்குரார்ப்பணத்தையே அவர் தனது விஜயத்தில் செய்திருக்கின்றார்.

அதனால் ரில்வினின் யாழ்ப்பாணம் உட்பட வடபகுதிகளுக்கான விஜயம் உண்மையில் தமிழ்த் தேசியத்துக்கான 'சிவப்பு சமிக்ஞை' என்பதை தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ்த் தேசிய வாதிகளும் உணர்ந்திருப்பார்களோ தெரியவில்லை.

இப்புரிதல் தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் தமிழ்த் தேசியவாதிகளுக்கும் 'தமிழ்த் தேசியம்' என்பது வெறும் உறைநிலையில் தான் செயற்பாட்டில் அல்ல என்பதனையே தெளிவாக்குகிறது..

• • •

## அடுத்து மாலை . .. தொடர்ச்சி ...

லைனிலும் ஆஃப்லைனிலும் எதிர்ப்புகளை அடக்க முயற்சி க்கும் ஒரு மசோதாவை மாலத்தீவு நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது, அரச நிர்வாகக் கிளையால் ஊடகங்கள் கையகப்படுத்தப்படுவதை எதிர்த்து நாங்கள் பத்திரிகையாளர்கள் ஒன்றாக நிற்போம் என்று நாட்டின் மிகப்பெரிய ஊடக ஊழியர்களின் சங்கமான மாலத்தீவு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அகமது நயீஃப் தெரிவித்துள்ளார்.

ஆனால் மாலத்தீவு ஊடக மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குமுறை மசோதா என்று அழைக்கப்படும் இந்த சட்டம், ஒளிபரப்பு மற்றும் இணையத்தள மற்றும் சமூக ஊடகங்களை மேற்பார்வையிடவும் "கருத்து சுதந்திரத்திற்கான அரசியலமைப்பு உரிமையைப் பாதுகாக்கவும்" ஒரு ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்க மட்டுமே முயல்கிறது என்று முய்சுவின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்படும் தனிப்பட்ட சமூக ஊடக கணக்குகள் இந்த சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படவில்லை, இது "தெளிவான தரநிலைகள் மற்றும் நடத்தை விதிகளை" நிறுவும் என்றும், தவறான தகவல் மற்றும் ஒருங்கிணைந்த உள்ளடக்க கையாளுதல் ஆகியவற்றின் சவால்களை நிவர்த்தி செய்யும்" என்று வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீல் ஓ இல் தெரிவித்துள்ளார்.

500,000 மக்களைக் கொண்ட தீவு நாடான மாலத்தீவில் இந்த சர்ச்சை பதட்டங்களை அதிகரித்துள்ளது, 2008 ஆம் ஆண்டில் இடம்பெற தேர்தல் மூலம் 30 ஆண்டுகால ஒரு நபர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்ததிலிருந்து அதன் ஜனநாயகத்தை வலுப்படுத்த மாலைதீவு போராடி வருகிறது.

அண்மையில் சமூக ஊடகத்தளங்களை தடை செய்த நேபாளத்தின் ஆட்சியை அங்கு ஏற்பட்ட போராட்டம் அகற்றியதை போல மாலைதீவிலும் போராட்டங்கள் இடமட்பெறலாம் என்ற அச்சங்கள் ஏற்பட்டுள்ளது.

## இஸ்ரேல், டோஹா ... தொடர்ச்சி ...

பாதுகாப்பதற்கே முன்னுரிமை வழங்குகின்றன. இதற்காக தமது அரசியல் எதிரிகளை கொல்வதற்கும் அவர்கள் தயங்குவதில்லை.

மிகவும் அண்மைக்காலம் வரை, போர்களையும் மோதல்களையும் தவிர்த்து வந்த கட்டார் ஒரு வருடத்தில் இரு தடவைகள் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. நாட்டின் பொதுமக்களைக் குறிவைக்காத துல்லியத் தாக்குதல்கள் இவை என அழைக்கப்பட்டாலும், அதனால் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப்போவதில்லை. கட்டாராக இருந்தாலும் சரி அல்லது இஸ்ரேலாக இருந்தாலும் சரி இவை போரிடும் பலவீனமான நாடுகள் அல்ல. இவை இரண்டுமே பன்னாட்டுச் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசுகளைக் கொண்டிருக்கின்றன. கட்டார் ஓர் அமைதியான வளங்கொழிக்கும் நாடாக இருப்பதற்கு அப்பால், பெரும் வருமானங்களை ஈட்டும் பூகோளப் பொருண்மியத்தைக் கொண்டிருக்கும் ஒரு நாடு. அப்படி இருந்தாலும் அந்த நாடு இப்போது தாக்குதலுக்கு உள்ளாகின்றது.

பிராந்திய ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் கட்டார் தற்போது வகிக்கும் பங்கை இது பலவீனப்படுத்துகிறது. ஹமாஸ் போன்ற அமைப்புகளை ஆதரித்து, ஒரு நடுவராகச் செயற்படுவதன் மூலம், ஒப்பந்தங்களைப் பேணிப்பாதுகாக்கும் ஒரு நாடு என்ற ஒரு விம்பம் கட்டாருக்கு இருந்தது. ஆகவே தனது நாட்டுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத பட்சத்தில், கட்டாருடைய சொல்லை எதிர்காலத்தில் யார் தான் நம்பப் போகிறார்கள். குறுங்கால பாதுகாப்பு நலன்களுக்காகக் கட்டார் நீண்ட காலமாக அனுபவித்து வந்த அதன் நம்பகத்தன்மை பலியாக்கப்படுகின்றது. தனது பாதுகாப்புக்காக இராணுவ நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதில்லை என்பதே கட்டாரின் கொள்கையாக இருந்து வந்தது.

எதிர்காலத்தில் இது உறுதியற்ற தன்மைக்கும், மோதல்கள் அதிகரிக்கவும், இராணுவமயமாக்கலுக்கும் இட்டுச் செல்லப்போகின்றது. கட்டாரைப் பொறுத்தவரையில் அது விழித்தெழ வேண்டிய நேரம் இதுவாகும். தனது பாதுகாப்புத் தொடர்பான தனது அணுகுமுறையை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய கடப்பாடு கட்டாருக்கு உண்டு. தனது மக்களின் மிகக் குறைந்த அரசியல் பங்களிப்புடன் ஏனைய நாடுகள் தங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கட்டாரைப் பயன்படுத்த அதன் தலைமை இடமளிக்கப் போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

கட்டார் இவ்வாறான ஒரு அணுகுமுறையைக் கைக்கொள்ளுமாயின், அதன் அயல்நாடுகளான சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றுடன் அது கொண்டுள்ள சிக்கலான உறவை உற்றுநோக்கும் போது, நீண்டகால அடிப்படையில் கட்டாருக்கு அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தெளிவாகின்றது.

**rt: அதே நேரம், ட்ரம்ப் மத்திய கிழக்குக்கு அண்மையில் ஒரு பயணத்தை மேற்கொண்டிருந்த போதிலும், பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் ஒரு தரப்பாக அமெரிக்கா மீதான நம்பிக்கை இழக்கப்பட்டு வருவதாக பல நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.**

**கிறிகொறி லுக்கியானோவ்**

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் அமெரிக்காவை நாடுவதற்கான காரணம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் அதன் ஆற்றல் அல்ல. அதற்கு மாறாக அமெரிக்கா கொண்டிருக்கும் பாரிய இராணுவ, பொருண்மிய, அரசியல் பலமே காரணமாகும். அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு அதனுடன் நட்புபாராட்ட வேண்டிய ஒரு சூழலில் நாடுகள் உள்ளன. இந்த நாடுகளுக்கு இதனைவிட வேறு எந்த தெரிவும் இல்லாதிருப்பதே இதற்குக் காரணமாகும். அந்தப் பிராந்தியத்தில் வேறு எந்த வல்லரசுமே அவ்வாறான ஒரு பலத்தைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறான பல நிகழ்வுகள் கடந்த காலத்திலும் நிகழ்ந்திருப்பதால் அமெரிக்கா கொண்டிருக்கும் நற்பெயரை இது பாதிக்கப்போவதில்லை. ஆனால் பிராந்தியப் பங்காளிகளைப் பொறுத்தவரையில் இது முக்கியமானதாகும். கட்டார் மற்றும் வளைகுடா நாடுகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இது மிகவும் முக்கியமானதாகும்.

இன்று சவூதி அரேபியாவும், துருக்கியும் இவ்வாறான அணுமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்று தெரிவிக்கின்ற பொழுதிலும், இஸ்ரேல் இவற்றுக்குக் கட்டுப்பட்டது என்று எவ்விதத்திலும் சொல்லமுடியாது.

ஆபிரகாம் ஒப்பந்தங்களில் கட்டார் ஒப்பமிடாத பொழுதிலும் இஸ்ரேலை ஒரு பொழுதுமே அது தாக்கவில்லை. அதற்கு மாறாக 2024இல் ஈரான், இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்ட பொழுது அதனை முறியடிப்பதற்குக் கட்டார் உதவிசெய்தது.

தற்போதைய சூழலில், பாரதூரமான நிகழ்வுகள் நடைபெறும் தருணத்தில் எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டாது வாளாவிருப்பதன் விளைவுகள் தொடர்பாக இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகள் காத்திரமாகச் சிந்திக்க வேண்டும். தமது பொருண்மிய நலன்களின் பின்னேயோ அன்றேல் அமெரிக்காவுடன்தமக்குள்ளஉறவின்பின்னேயோ இந்த நாடுகள் ஒழிந்துகொள்ள முடியாது.

### ஹமாசுக்கு மாற்றீடு இல்லை

**rt: ஹமாசுக்கு மாற்றீடாக யாரும் இல்லை என்பதை பிராந்திய நாடுகள் உண்மையாகவே ஏற்றுக்கொண்டிருக்கின்றனவா?**

**கிறிகொறி லுக்கியானோவ்**

தங்களுக்கான மாற்றீட்டை யார் ஏற்படுத்த முடியும்? ஹமாசால் மட்டும் தான் அது முடியும். ஆனால் காஸாவைப் பொறுத்தளவில் தமக்கு மாற்றீடாக யாரும் எழுவதற்கு ஹமாஸ் இடமளிக்கவில்லை. இஸ்லாமிய ஜிஹாத்துடன் இணைந்து செயலாற்றுவது அவர்களுக்கு சௌகரியமாக இருந்தது. காரணம் ஜிஹாத் பொதுமக்களை உள்ளடக்கிய ஒரு அரசியல் அமைப்பு அல்ல. ஜிஹாத் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பதில்லை.

பாலஸ்தீன தேசிய அதிகாரத்தை எடுத்துக் கொண்டால், அதற்கு அறநெறி ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ, நிதி ரீதியாகவோ அல்லது மனித ஆதரவு ரீதியாகவோ ஒழுங்கமைப்பு வளங்கள் ரீதியாகவோ ஹமாஸை எதிர்க்கும் வல்லமை இல்லை. மேலும் 2006 இல் தேர்தல் அதன் வெற்றியைப் பிரதிபலித்தது.

ஹமாசின் ஆயுதப் படைக்கு எதிரான ஓர் அமைதி அமைப்பை இஸ்ரேல் உருவாக்கி இருக்க முடியும். ஆனால் இஸ்ரேல் அப்படி எதுவும் செய்யவில்லை. ஹமாசின்சட்டபூர்வமற்றதன்மை, அதன் போராளிகளுக்கு எதிராக மட்டுமல்ல காஸாவில் வாழும் முழு மக்களுக்கு எதிராகவும் மனிதநேயம் அறவேயற்ற நடைமுறைகளைப் பயன்படுத்த இஸ்ரேலுக்கு அனுமதி அளிக்கிறது.

அரபு நாடுகளைப் பொறுத்தவரையில் அரேபிய வசந்தகாலம் போன்ற அவற்றின் உள்ளகப் பிரச்சினைகளின் காரணமாக பாலஸ்தீனப் பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இவற்றுக்கு மாறாக ஹமாஸ் காஸாவைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பது எகிப்தினதும் கட்டாரின் நலன்களை அடிப்படையாகக் கொண்டது. இதற்கான மாற்றுவழிகளில் யாருமே ஆர்வம் காட்டவில்லை என்பதே உண்மையாகும்.

***நன்றி: rt.com***

## கிழக்குப் பல்... தொடர்ச்சி ...

வித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி மனிதர்கள் முன் நிறுத்தப்பட்டு முகமூடியினால் தலையாட்டப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் இச் சம்பவத்தை நேரில் பார்த்த பலரும் 35 ஆண்டுகள் கடந்தும் நினைவு கூறுகின்றனர்.

இந்த இராணுவ சீருடையில் காணப்பட்ட முகமூடி நபர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம்களாகவும் இருக்கலாம் எனும் சந்தேகமும் அவர்களிடம் இப்போதும் காணப்படுகிறது.

இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கிழக்குப் பலகலைக் கழக அகதி முகாமெங்கும் பதற்றம் தொற்றிக்கொள்ள எங்கும் அழுகைக் குரல்களையே கேட்க முடிந்தது, அவ்வேளை அந்த பிரதேசத்திலும் மாவட்டத்திலும் நிலவிய பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அவர்களைத் தேடிச் செல்ல முடியாதவாறு உறவினர்களும் முகாமுக்குள் முடிங்கிக் கிடந்தனதாகவும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதான குழு பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்திருந்தது.

அதற்கு பதிலளித்த பாதுகாப்புத் தரப்பு செப்டம்பர் 5ஆம் திகதி அன்றைய தினம் 32 பேரை மட்டுமே விசாரணைக்காக கைது அழைத்துச் சென்றதாகவும் 24 மணி நேரத்திற்குள் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் எனவுமே அவ்வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராப் பதவி வகித்த எயர்மார்சல் பெர்னாண்டோ இதற்கான பதிலை அனுப்பியிருந்தார். இப்பதிலை மட்டக்களப்பு சமாதானக் குழு நிராகரித்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் விசாரணைக்கென 158 பொதுமக்கள் அழைத்துச் செல்லப்பட்டு மூன்றாம் நாள் செப்டம்பர் 8ஆம் திகதி கிழக்கு பல்கலைக் கழக அகதி முகாமுக்குச் சென்று சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக கிழக்கு மாகாண இராணுவத் தளபதியாக இருந்த ஜெரி சில்வா உள்ளிட்ட பாதுகாப்பு உயர்மட்டக் குழுவினரும் விஜயம் செய்திருந்தனர்.

அவ்வேளை இராணுவத்தினரே எமது உறவுகளை அழைத்து சென்றதாக பொதுமக்களும் முகாம் பொறுப்பாளர்களும் இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்த வேளை கடும்தொனியில் இராணுவ அதிகாரிகள் பதிலளித்ததாக்வும் கூறப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்களின் விசாரணைக்காக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அவ் ஆணைக்குழு முன்னிலையில் பல மக்கள் சாட்சியமளித்திருந்தனர்.

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொதுமக்கள் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில் இராணுவத்தினரே செப்டம்பர் 5ஆந் திகதி 158 பேரையும், 23 ஆம் திகதி 16 பேரையும் கைது செய்து கொண்டு சென்றனர் என தெரிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத் துயர சம்பவங்கள் இடம்பெற்று 35 வருடங்கள் கடந்தும் ஆண்டுகள் தோறும் எமது மக்களின் நீதிக்கான கோஷங்களுடன் நினைவேந்தல்களும் மாத்திரமே நடைபெறுகின்றன.

• • •

### காணியுரிமை ... தொடர்ச்சி ...

வீடுகளை பெற்றுக் கொள்வதும் இழுபறி நிலையிலேயே உள்ளது. இவ்வாறு பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் பெருந்தோட்ட மக்களுக்கான தனி வீட்டுத்திட்டத்தை முன்னெடுப்பதில் பல்வேறு தடைகள் காணப் படுகின்றன.

**காலாவதியான அடிப்படை வசதிகள்**

பல தசாப்தங்களுக்கு முன்பு கட்டப்பட்ட லயன் வீடுகளில் இன்றும் மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்த லயன் வீடுகளில் முறையான அடிப்படை வசதிகள் கிடையாது. ஆங்கிலேயர் காலத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்ட வாழ் விடங்களிலேயே 200 வருடங்கள் கழிந்தும் மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த தொடர் வீடமைப்பு முறையானது ஒற்றை, இரட்டை வரிசை லயன் வீடுகளாக அமைக் கப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் 12 அறை களையும், இரண்டு வரிசையில் 24 தொடர் அறைகளையும் கொண்டுள்ளன.


இதில் ஒரு அறையின் நீளம், அகலம் 12×10 (120 சதுர அடி) என்று அளவுத்திட்டத்தில் ஆங்கிலேயர்களினால் அமைத்துக் கொடுக்கப் பட்ட தற்காலிக வாழிடங்கள் ஆகும். இந்த நிலையில் மலையகத்தில் வீட்டுத் திட்டங் கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனூடாக ஓரளவு நிம்மதி கிடைத்தாலும் முழுமையாக மகிழ்ச்சியடைய முடியுமா? என்பது சந்தே கமே. மலையகத்தில் வீட்டுத்திட்டங்கள் இருந் தாலும், கிராமங்கள் மற்றும் நகரங்களில்காணப் படும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் முழுமையாகக் கிடைக்கவில்லை.

வீடமைப்புடன் இணைந்த உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் சுகாதார அபிவிருத்தி யிலும் பல சவால்கள் காணப்படுகின் றன. புதிய வீடுகளுக்காக ஒதுக்கப்படும் காணிகள் இதற்கு பிரதான காரணமாகும். குறிப்பாக தோட்டங்க ளில் பயன்பாட்டில் இல்லாத மலைகள் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக இழுபறிகளுடன் ஒதுக்கப்படுகின்றன. அங்கு எவ்வாறு புதிய வீடுகளுடன் சுகாதார அபிவிருத்திகளையும் ஏற்படுத்த முடியும் என்பது கேள்விகுறியான விடயமாகும். ஆனால் பெருந்தோட்ட மக்க ளுக்கு காணி உரிமையை வழங்கினால் இந்த பிரச்சினைக்கு இலகுவில் தீர்வை எட்ட முடியும்.

தங்களுக்கான வீடுகளை தாங்களாகவே அமைத்துக் கொள்ளும் நிலைக்கு மலையக மக்கள் தற்போது மாறியுள்ளனர். எனினும் காணி உரிமை என்பதே அந்த மக்களுக்கு எட்டாத கனியாக உள்ளது. காணி உரிமை என்பது மலையக மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். இது அவர்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமானது. எனவே, வீடமைப்பு திட்டத்துக்கு காணி உரிமையுடன் பொருத்தமான காணிகள் ஒதுக்கப்படுமாயின் மலையக மக்களின் வாழ்க்கை தரம் முன்னேற்ற மடையும்.

• • •




### அரசியல் வீழ்... தொடர்ச்சி ...

இம்மானுவேல் மக்ரோனுக்கு எதிரான மக்களின் கோபத்தை அதிகரித்துள்ளது. சமீபத்திய பிரத மரின் மாற்றத்திற்குப் பிறகும், அரசுக்கு எதிரான நெருக்கடி குறைந்து வருவதற் கான அறிகுறியைக் காணவில்லை, மாநிலத் தலைவரின் செல்வாக்கு களும் குறைந்து வருகின்றன.

மக்ரோனின் ஏழாவது பிரதமராக கடந்த வாரம் பதவியேற்ற முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் செபாஸ்டியன் லெகோர்னு, ஒரு புதிய நடைமுறையை வகுப்பதாக உறுதியளித்துள்ளார். ஆனால் அது தொழிலாளர்களின் விரோதத்தை தணிக்கத் தவறிவிட்டது.

லெகோர்னுவின் முன்னோடியான பிராங் கோயிஸ் பேரூவால் கொண்டுவரப்பட்ட 44 பில்லியன் யூரோ ($52 பில்லியன்) சிக்கனத் திட்டம் குறித்து தொழிற்சங்கங்கள் தொடர்ந்து சீற்றத்துடன் உள்ளன. பிரதமர்கள் வாழ்நாள் முழுவதும் அனுபவித்து வந்த சலுகைகளை ரத்து செய்வதற்கும், இரண்டு பொது விடு முறை நாட்களைக் குறைப்பதற்கான திட்ட த்தை கைவிடுவது என்ற லெகோர்னுவின் வாக்குறுதிகள் குறித்தும் அவர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

மக்ரோன் இன்னும் 18 மாதங்கள் ஆட்சியில் இருப்பார் ஆனால் இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த மக்கள் ஆதரவு மதிப்பீடுகளை அவர் எதிர்கொள்கிறார்.

### தியாகி திலீபன் . .. தொடர்ச்சி ...

அணிதிரள வேண்டிய தேவை இப்போது தமிழ் மக்களுக்கு அவசியம் உண்டு.

ஆயுதம் ஏந்தாமல் அறப்போராட்டம் மூலம் ஒருதுளி நீர் கூட அருந்தாமல் உறுதியாக தமது உயிரை இனத்துக்காக தியாகம் செய்யும் போது அவர் கூறிய வார்த்தையை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வோர் தமிழருக்கும் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் அரசியலுக்காகவும், வாக்கு அரசி யலுக் காகவும் தமிழ்தேசிய கட்சிகள் செயல் படுவதை விட்டு விடுதலை அரசியலுக்காக மக்களை அணிதிரட்டும் காலம் 16 வருடம் கடந்தும் செய்ய தவறினால் தமிழ்மக்களின் இருந்தும், குறிப்பாக தமிழ் இளைஞர்கள் மத்தி யில் இருந்தும் தமிழ்த்தேசிய உணர்வுகள் அற்ற மரக்கட்டைகளாக தமிழினம் மாறப் படுவது நிச்சயமாகும்.

இதற்கு உதாரணமாக யாழ்மாவட்டத்துக்கு அடிக்கடி போய்வரும் ஜனாதிபதியும், பிரதம ரும் அபிவிருத்தி திட்டங்களை மட்டும் ஆரம்பித்து பொருளாதாரம் தொடர்பாக மட்டும் உரையாடிச் செல்கின்றனர்.

இனப்பிரச்சனை தொடர்பாகவோ, இனப் படுகொலை தொடர்பாகவோ அவர்களால் வாய் திறக்க முடியவில்லை.

ஆளும் தரப்பு தேசிய மக்கள் சக்தி அரசில் உள்ளவர்கள் அப்படி இருந்தாலும் எதிர்கட்சி தலைவராக உள்ள சஜீத் பிரமதாசாவும் தமிழ் மக்கள் தொடர்பாக ஏன் செம்மணி புதை குழி தொடர்பாக இதுவரை அவரும் வாயே திறக்கவில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை தோற்கடிக்க கருவியாக தமிழரசுக்கட்சியில் சிலர் அவரை பாவித்தனர் அந்த நன்றிக்காகவது சஜீத் தமிழ் மக்கள் தொடர்பாக எதுவும் பேசாமல் தமது சிங்கள இன வாதத்தை நிருபித்து விட்டார்.

எனவே 38வது ஆண்டு தியாகி திலீப னுக்கு வணக்கம் செலுத்தும் தமிழ் மக்கள் அவர் கூறிய மக்கள் புரட்சியினை செயல் வடிவம் கொடுப் பதே அவருக்கு உண்மையாக நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்







